பக்கங்கள் 8 — விலை சதம் 40

ஈழநாடு

The EELA NADU

மலர்: 19 பங்குனி 19 ரபி ஆகி: 11 இதழ்- 50
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 1 4 77

பிரதேச சுயாட்சித் திட்டத்தை சுதந்திரக்கட்சி ஏற்றுக்கொள்ளுமா

முருகையா அறிக்கைக்கு கம்.பிரமுகர் பதில்

யாழ்ப்பாணம், வெள்ளி

ஐந்து அம்சத்திட்ட அடிப்படையில் காங்கேசன்துறை இடைத்தேர்தலில் பிரசாரம் செய்வதை ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியின் சார்பில் திரு. குமாரசூரியர் விரும்பவில்லை என்றே தெளிவாகக் கூறியுள்ளார். இதனை சமசமாஜக்கட்சி சார்பில் பங்குபற்றியவர்களும் ஏற்றுக்கொண்டனர்.

இலங்கை கம்யூனிஸ்ட்கட்சி வடபிரதேச உதவி செயலாளர் திரு. எஸ். விஜயானந்தன் வெளியிட்டுள்ள அளிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது: ஐக்கிய முன்னணிக்குச்சங்டகமான நிபந்தனைகளை ஏற்படுத்தாமலிருப்பதாகவே கம்யூனிஸ்கட்சி ஐந்தம்சத் திட்டத்தைப்பற்றி பிரசாரத்தை நிறுத்திக்கொண்டது

இலங்கை கம்யூனிஸ்ட்கட்சி முன்வைத்துள்ள பிரதேச சுயாட்சி கொள்கைபற்றி திரு. வி. பொன்னம்பலம் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசியது உண்மைக்குப் புறம்பானது என திரு. மு. முருகையா தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

அவரின் அறிக்கையிலே, இந்த சம்பவங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன இது தான் உண்மை. அப்படியிருக்க திரு. வி. பொன்னம்பலம் பேசியது உண்மைக்குப் புறம்பானது என்று திரு. முருகையா கூறுவதன் அர்த்தம் புரியவில்லை, காலம் கடந்தாயினும் திரு. குமாரசூரியரோ, அல்லது

(8-ம் பக்கம் பார்க்க)

"செல்வாவின் நிலை: இனி அச்சமில்லை"

நிபுணர் கப்ரால் தகவல்

யாழ்ப்பாணம், வெள்ளி

வாவை நேற்றுக்காலை, மூளைநரம்பு சிகிச்சை நிபுணர் டாக்டர் கப்ரால் மீண்டும் பரிசோதனை செய்தபின் இனிமேல் பயப்படத் தேவையில்லை. படிப்படியாக மூன்று கிழமைக்குள் மயக்கம் தெளியும் என்று நம்பிக்கைதெரிவித்ததாகத் தெரிகிறது.

மூதறிஞர் செல்வாவை பரிசோதனை செய்தபின் டாக்டர் கப்ரால் நேற்று நண்பகல் விமானத்தில்கொழும்பு திரும்பினார்.

தந்தை செல்வாவின் பிறந்த தினமான நேற்று அவருக்கு புதிய சேட் அணிவிக்கப்பட்டது. முகச் சவரமும் செய்யப்பட்டிருந்தது

பிறந்த தினத்தை முன்னிட்டு, ஆதரவாளர்க இரண்டு புதிய சேட்டுக்களை வழங்கியிருந்தனர். அவற்றில் ஒன்று அவருக்கு அணியப்பட்டது.

அருகில்நின்று 'ஐயா' என்று அழைத்தபோது அந்த ஒலியை உணரக்கூடியசக்தி ஏற்பட்டுள்ளதை அவரின் முகஅசைவிலிருந்து காணக்கூடியதாக இருந்ததாம். 'ஐயா' என்றழைத்ததும் முகத்தில் ஒரு திடீர் அசைவு ஏற்பட்டதை காணக்கூடியதாக இருந்ததாம்.

உடலில் நோவு ஏற்படும் போது, அதன் தாக்கத்தை உணரக்கூடிய சக்தி தந்தை செல்வாவிற்கு ஏற்பட்டுள்ளது. இரத்த அழுக்கம் பரிசோதனை செய்யப்படும்போது கைகளில் ரப்பரினால் பலமாகக் கட்டும்போது, அதனால் ஏற்படும் நோவினால் முகத்தில் அதிர்ச்சி காணக்கூடியதாக இருக்கிறது.

கண் இமைகளை அடிக்கொரு தடவை மெதுவாகத்திறக்க முயற்சித்து வருகிறார். வாயினாலும் மூச்சுவிடுவதை இருபக்கச் சொக்கிலும் ஏற்படும் அசைவுகள் காண்பிக்கிறது.

மூக்கினாலேயே தொடர்ந்து குழாய்மூலம் நீர்ப்பதார்த்தங்கள் கொடுக்கப்பட்டு வருகிறது.

ஹோர்லிக்ஸ் ஒத்துவரவில்லை

ஹோர்லிக்ஸ், விட்டா மோல்ட் வழக்கமாக அவர் பாவித்துவந்த திவ்ஸையாம். அதனால் ஹோர்லிக்ஸ், விட்ஏற்றப்பட்டபோதிலும் தந்தை செல்வாவிற்கு ஒத்துப் போகவில்லை. இதனால் அவற்றுக்குப்பதிலாகப் கோப்பி கொடுக்கப்பட்டுவருகிறது. இளநீர் கொடுப்பதும் குறைக்கப்பட்டிருக்கிறது. சோடம் பழச்சாறு கொடுப்பதும் குறைக்கப்பட்டிருக்கிறது. நேற்று நண்பகல் குழாய்மூலம் கோப்பி மட்டுமே கொடுக்கப்பட்டது.

நெஞ்சில் சளி இருப்பதன காரணமாக வாயினால் நீர்ப்பதார்த்தங்கள் கொடுக்கப்படவில்லை. நெஞ்சிலுள்ள சளியை அகற்றுவதற்கும் சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறது.

நேற்று வடபகுதியிலும் பல கோவில்களில் விசேடபூசை

(8-ம் பக்கம் பார்க்க)

செல்வா சுகம்பெற விசேட ஆராதனைகள்

யாழ்ப்பாணம், வெள்ளி

மூதறிஞர் செல்வநாயகத்தின் பிறந்ததினமான நேற்று வடக்கு-கிழக்கு மாகாணங்களிலும் கொழும்பிலும் பல கோவில்களிலும் தேவாலயங்களிலும் பிரார்த்தனைகள் இடம்பெற்றன.

பக்திப்பாடல்களுக்கு தடை?

நேற்று யாழ்ப்பாணம் பெரியகடைப்பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்கள் பக்திப்பாடல்களை ஒலிபரப்புவதற்கு விரும்பியபோதும் பொலிசாரின் தலையீட்டால் ஒலிபரப்பப்படவில்லையாம்.

கடந்த வருடம் மூதறிஞர் செல்வாவின் பிறந்ததினத்தன்று இதே வர்த்தக நிலையங்கள் தந்தை செல்வா விரும்பிய நாதஸ்வர இசையை ஒலிபரப்பின. இவ்வருடம் அவர் சுகவீனமுற்றிருந்ததினால் நாதஸ்வர இசைக்குப் பதிலாக பக்திப்பாடல்களை ஒலிபரப்ப வர்த்தக நிலையங்கள் ஏற்பாடு செய்திருந்தன.

இதுபற்றி பெரியகடையிலுள்ள வர்த்தக நிலைய அதிபர் ஒருவரிடம் கேட்டபோது பக்திப்பாடல்கள் ஒலிபரப்பக் கூடாதென பொலிசார் தடை செய்துவிடட்டதாகக் கூறினார்.

தந்தை செல்வா சுகம்பெற வண்ணை காமாட்சி அம்பாள் கோவில், நல்லூர் சட்டநாதர் கோவில்களில் விசேட பூசைகள் நடைபெற்றன.

சங்காபிஷேகம்

வண்ணை ஐயனார்கோவிலில் சங்காபிஷேகம் நடைபெற்றது. கோண்டாவில் கிழக்குப் பிள்ளையார் ஆலயத்தில் அன்னதானம் நடைபெற்றது. தாவடி பிள்ளையார்கோவிலில் விசேட வழிபாடு இடம்பெற்றது. பாடசாலை மாணவ மாணவிகளும்பங்கு பற்றினர்.

இளவாலையில்

இளவாலை கிறிஸ்தவ தேவாலயத்தில் வணபிதா அன்ரன் ராஜநாயகம் தலைமையில்

(8-ம் பக்கம் பார்க்க)

அமிர் - வாசுதேவா

நாளை பேச்சுவார்த்தை?

(கொழும்பு)

தமிழர் விடுதலைக்கூட்டணி செயல் அதிபர் திரு. அ. அமிர்தலிங்கமும் லங்கா சமசமாஜக் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட திரு. வாசுதேவ நாணயக்காராவும் நாளை சனிக்கிழமை சந்தித்து பேச்சு நடத்துவார்களெனத் தெரிகிறது.

கொழும்பில் நடைபெற இருக்கும் இப்பேச்சுவார்த்தைக்கான ஏற்பாடுகளை சமசமாஜக்கட்சியின் வாசுதேவா ஆதரவாளர்கள் மேற்கொண்டு வருகின்றனர் என வாசுதேவாவுடன் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்தன.

இரு தேவாவில் சமசமாஜக் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட திரு. நாணயக்காரானவை மீண்டும் கட்சியில் சேர்க்குமாறு நாட்டின் பல பகுதிகளிலுமிருந்து கட்சியின் தலைமைப்பீடத்தைப் பலர் கோரி வருகின்றனர் என்றும் திரு. வாசுதேவாவின் விலக்கல் அறிவித்தலை கட்சி வாபஸ் பெறுவிடின் தாமும் கட்சியிலிருந்து விலகப்போவதாகப் பல அங்கத்தவர்கள் தெரிவித்துள்ளனர் என்றும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

வாசுதேவா கோரிக்கை

கட்சியிலிருந்து விலக விரும்பும் தமது ஆதரவாளர்களை அதிலிருந்து விலகவேண்டாம் என்றும் கட்சியில் இருந்து கொண்டே அதனுள் இருக்

(8- ம் பக்கம் பார்க்க)

வாசுதேவாவும் மூவரும் கட்சியிலிருந்து நீக்கம்

கொழும்பு, வியாழன்

போட்டித் தொழிற்சங்கம் அமைத்தார்களென்ற குற்றச்சாட்டின் பேரில் கிரியெல்ல எம். பி. திரு. வாசுதேவ நாணயக்கார உட்பட நால்வர் சமசமாஜக்கட்சியிலிருந்து நீக்கப்பட்டனர்.

இவர்கள் இக்குற்றச்சாட்டின்பேரில் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டிருந்தனர் இச்செயல் கட்சியின் கட்டுப்பாட்டை மீறும் செயலென்பதால் கட்சியிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

நேற்று இவர்கள் நால்வரும் அரசியல் குழு முன்னிலையில் சமுகமளித்தனர். இவர்கள் நால்வரும் தனித்தனியே சமுகமளிக்க மறுத்து. ஒரு கோஷ்டியாகவே சமுகமளிக்க விரும்பினர். பின், அரசியல் குழுவின் முன் சமுகமளிக்க மறுத்தனர். இதனால் கட்சியிலிருந்து நீக்கப்பட்டார். (சு)

கொழும்பில் டாக்டர்கள் வெளிநடப்பு

கொழும்பு, வியாழன்

கொழும்பு ஆஸ்பத்திரிகளில் கடமையாற்றும் டாக்டர்கள் இன்று தமது கடமைகளைச் செய்யாது வெளிநடப்புச் செய்தனர்.

பகல் 12 மணி முதல் மாலை வரை இடம்பெற்ற இவ்வெளிநடப்பு காரணமாகப் பெருந்தொகையான நோயாளிகள் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

டாக்டர்களின் கோரிக்கைகளில் அநேகமானவை திருப்திகரமாக நிறைவேற்றப்பட்டுள்ளபோதிலும் டாக்டர்கள்

(8ம் பக்கம் பார்க்க)

ஆட்சி மன்ற கூட்டம்: முக்கிய தீர்மானம் இல்லை

கொழும்பு, வியா.

கொழும்பில் நடைபெற்ற ஆட்சி மன்றக் குழுக் கூட்டத்தில் மிக முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டபோதிலும் எதிர்பார்த்தது போன்று எதுவும் தீர்மானிக்கப்படவில்லை.

சுதந்திரக் கட்சி தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் 85 எம். பி.க்கள் கலந்துகொண்டனர்.

மாலை 5 மணி முதல் இரவு 7-30 மணிவரை கூட்டம் நடைபெற்றது. (இ)

வட்டு எம் பிக்கு புரியவில்லையாம்

கொழும்பு, வியாழன்

ஆட்சி மன்றக் குழுக் கூட்டம் முழுவதும் சிங்கள மொழியில் நடைபெற்றமையால் அங்கு நடைபெற்ற எதையும் தம்மால் முற்று முழுதாகப் புரிந்துகொள்ள முடியவில்லை என வட்டுக்கோட்டை எம். பி. திரு. ஆ. தியாகராஜா நமது பிரதிநிதியிடம் தெரிவித்தார். (இ)

மதநம்பிக்கையும் தார்மீகப் பண்புகளுமருகிவருகின்றன

ஸ்ரீகாஞ்சி காமகோடி சுவாமிகள் பேட்டி

(நமது நிருபர் சாந்தா)

மதுரை, மார்ச் 31

"உலகில் இன்று எல்லா மதத்தினரிடையேயும் மத நம்பிக்கை குறைந்து வருகிறது. தார்மீகப் பண்புகளும் அருகி வருகின்றன. இவைகளைப் பாதுகாப்பதன் அவசியத்தை மக்களுக்கு சரியான வழியில் உணர்த்துவதே சகல மதத்தலைவர்களினதும் குறிக்கோளாகஇருக்க வேண்டும்" என்று ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி ஜெகத்குரு ஸ்ரீஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் மதுரையில் நடைபெறும் உலக மத மாநாட்டினை ஒட்டி "ஈழநாடு" பத்திரிகைக்கு அளித்தபேட்டி ஒன்றில் கூறினர்.

"இந்த மாநாடு ஒருசார்புள்ள சமய நாநாடல்ல, அதேபோல சமயத்தலைவர்கள் கலந்துகொள்ளும் மாநாடும் அல்ல பல்வேறு சமயங்களையும் சார்ந்த சமயவல்லுநர்களைத்தான் அழைத்திருக்கின்றோம்.

"இம்மாநாட்டில் பல மதங்களைச் சேர்ந்த வல்லுநர்கள் மதங்களின் உண்மைத்தத்துவங்களைவிளக்கிக்கூறுவார்கள். பொருளாதாரம், சமூகப் பிரச்னைகள் காரணமாக ஏற்படும் கஷ்டங்களைக்கண்டு மக்கள் கடவுள் நம்பிக்கையை இன்று இழந்து வருகிறார்கள். இதைத் தீர்க்கவே மாநாட்டைக் கூட்டியிருக்கின்றோம். மதநூல்களின் அடிப்படையில் பேசிப்பேசி, அபிப்பிராய பேதங்களைக் குறைத்துக்கொள்வதுதான் மாநாட்டின் அடிப்படை நோக்கமாகும்" என்று சுவாமிகள் விளக்கினர்.

இந்த மாநாட்டில் நடைபெறும் விவாதங்களில் பல்வேறுநாட்டு சமயவல்லுநர்களும் மத சம்பந்தமான கருத்துரைகளை வழங்குவதுடன் சிறப்பு அம்சமாக கலைநிகழ்ச்சிகளும் நடைபெறஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இன்று 1-ம் திகதி வெள்ளிக்கிழமை வெளிநாட்டுமாணவர்கள் கலந்துகொள்ளும் விணைக்கச்சேரிநடைபெறும். கவியரங்கத்தில் கவிஞர் கண்ணதாசன், எஸ். டி. சுந்தரம் ஆகியோர் கலந்துகொள்கின்றனர். மதுரை மீனாட்சி திருக்கல்யாணம், சுவாமிகள் யாத்திரை செய்ததுபற்றிய திரைப்படங்களும் காண்பிக்கப்படும். இதனுடன், இந்தோனேஷியாவிலிருந்து வரும் குழுவினரின் இராமாயணநாடகமும் இடம்பெறும்.

(உ)

ஊர்காவற்றுறை

பாடசாலை அதிபர்கள் சங்கம் அமைத்தனர்

வேலணை, வியாழன்

ஊர்காவற்றுறைத் தொகுதியில் பாடசாலை அதிபர்கள் சங்கம் ஒன்றினை ஊர்காவற்றுறை எம்.பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் அங்குரார்ப்பணம் செய்துவைத்தார்.

வேலணை சரஸ்வதி வித்தியாசாலையில் நடைபெற்ற இந்த அங்குரார்ப்பணக் கூட்டத்தில் அவர் பேசுகையில், "எமது தொகுதி இரு கல்விவட்டாரங்களாக உள்ளது. கல்லூரிக்கான கட்டடங்களைப் பெறுவதிலும், ஆசிரியர் பற்றுக்குறையைத் தீர்த்துவைப்பதிலும அதிபர்கள் ஐந்தாண்டுத் திட்டம் ஒன்றினைவகுக்கவேண்டும். இந்தவகையில் இச்சங்கத்தின் பணி பெரியது" என்றார். (உ)

வட்டு. எம். பி. கூட்டும் கூட்டம்

சுழிபுரம், வியாழன்

வட்டுக்கோட்டைத்தொகுதி எம். பி. திரு. ஆ. தியாகராசா ஏப்ரல் 10-ம்திகதி ஞாயிற்றுக்கிழமை வட்டுக்கோட்டையிலுள்ள மாவடியில் பொதுக் கூட்டம் ஒன்றைக் கூட்டுகின்றார். தமது அரசியல் நிலைமை, தாம்செய்த சேவை விபரம், செய்யவுள்ள திட்டங்கள்பற்றி எம். பி. அறிவிப்பார். (அ)

யாழ்ப்பாணம் அரசாங்க வைத்தியசாலையில் கடமையாற்றி தற்போது நைஜீரியாவில் பணியாற்றும் வைத்திய கலாநிதி வே. இராசபிள்ளைக்கு லண்டன் ரோயல் கல்லூரி 'எப். ஆர். ஸி. பாத்' பட்டம் வழங்கிக் கௌரவித்துள்ளது. யாழ். மத்திய கல்லூரிப் பழைய மாணவரான இவர் எம்.ஆர்.சி.பி. (எடின்பர்க்), டி. சி. பி. (லண்டன்) எம். ஆர். சி. பாத்பட்டங்கள் பெற்றிருக்கிறார்.

தாதிகள் பயிற்சி ஆரம்பம்

யாழ்ப்பாணம், வெள்ளி

இவ்வருடம் தாதிகளாக நியமனம் பெற்றவர்களுக்கான மூன்று வருடப் பயிற்சி இம்மாதம் முதல் யாழ். தாதிகள் பயிற்சிக் கல்லூரியில் ஆரம்பமாகின்றன. சுமார் முப்பதுக்கு மேற்பட்ட தாதி மாணவர்கள் இப்பயிற்சியை மேற்கொள்ளவுள்ளனர்.

இப்பயிற்சிக் கல்லூரியில் கடந்த 1974ம் ஆண்டு தாதிகளாக நியமனம் பெற்ற ஒரு மருத்துவமாது உட்பட 34 மாணவிகள் தமது மூன்று வருடப் பயிற்சியை முடித்துக்கொண்டு ஜூன் மாதம் முதலாம் திகதி வெளியேறவுள்ளனர். (நெல். அ.)

• • •

விலைகூட்டி விற்றாராம்

யாழ்ப்பாணம், வெள்ளி

சவரின்டால்கம் பவுடர் விலைக்கூட்டி விற்றதாக யாழ். நகர் கடைக்காரர் ஒருவர் மீது விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

3ரூ-60 சதத்திற்கு விற்க வேண்டிய பவுடர்ரின்னை 3ரூ-70 சதத்திற்கு இக்கடைக்காரர் விற்றாராம்.

நீதிமன்ற விற்பனவு விளம்பரம்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்.

வழக்கு இல: ஈடு / 503

அளவெட்டியைச் சேர்ந்த சந்திரவர் சிதம்பரப்பிள்ளை வாதி

எதிராக

அளவெட்டி வடக்கு அளவெட்டியைச் சேர்ந்த கந்தர் தில்லையம்பலம் பிரதிவாதி

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் ஈடு / 503 இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த நீதிமன்றக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் காணி 1977-ம் ஆண்டு வைகாசி மாதம் 10-ம் திகதி (1977-5-10) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை

மேற்குறித்த பிரதிவாதி குறித்த வாதிக்கு ரூபா 880-60ம் மேலும் ரூபா 500/- வருடமொன்றுக்கு நூற்றுக்கு 10 வட்டி வீதம் வழக்கு அணைத்த திகதியாகிய 1975-ம் ஆண்டு மார்கழி மாதம் 22-ம் திகதியிலிருந்து தீர்வைத் திகதியாகிய 1976-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 26-ம் திகதி வரையுமான வட்டியும் அதன் பின் தீர்வை முழுத்தொகைக்கும் இறுக்கப்படும் வரை சட்ட வட்டியான வருடமொன்றுக்கு நூற்றுக்கு 5 வீத வட்டியும் வழக்குச் செலவு ரூபா 503-02½. இதில் நடைபெற்ற செலவு ரூபா 302-45. நடைபெறவேண்டிய செலவு ரூபா 98-62½ மேலதிக சமயாசமயச் செலவு ரூபா 101-95 கொடுக்கவேண்டும்.

குறித்த ஆதன இடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி மல்லாகம் கோவில்பற்று அளவெட்டி இறை மனிம் பவுடை நிலப்பரப்பு 8ம், பனைகளும், கிணறும், இதற்கு எல்லை கிழக்கு எல்லுப்போலை கந்தையாவின் உரிமைக்காரரின் ஆதனமும் ஒழுங்கை முகப்பும். வடக்கு நாகமுத்து சிவலிங்கத்துக்கும் விசுவர் கணபதிப்பிள்ளைக்கும் உரிய ஆதனங்கள். மேற்கு ஒழுங்கை முகப்பும் சின்னத்துரை பெண் ஆச்சிமுத்துவுக்குரிய ஆதனங்களும் பறுபதத்துக்கும் பங்காளருக்கும் உரிய ஆதனங்களும். தெற்கு கந்தையா பெண் பாக்கியத்தினதனம். இவ்வெல்லைக்குட்பட்டவைகளுட் சொரியலாய் 1/4 பங்கும் அதற்குரியவைகளும்.

சி. ஆ. த. வடிவேலு J. P.

"வடிவேல் உதயம்"
காங்கேசன் துறை வீதி.
கோண்டாவில்.
19-3-1977

நீதிமன்ற விற்பனை
ஆணையாளரும் விலைமதிப்பாளரும்.

5821

சிறுவிளம்பரம்

தேவை

முல்லைத்தீவில்கடமையாற்ற பாதுகாப்பு சேவையாளர் உடனடியாகத் தேவை. New Maths ஆற்றல் இருப்பின் விரும்பத்தக்கது. கடிதமூலம் விண்ணப்பிக்கவும். ச. இராமலிங்கம், நிர்வாகி, 79, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 5820

நெசவுவேலையும், மெசினில் பூப்போடவும் தெரிந்த முப்பது வயதுக்கு மேற்பட்ட உபாத்தியாயினி தேவை. உடனடியாக விண்ணப்பிக்கவும்: யோகர் சுவாமி மகளிர் பயிற்சி நிலையம், 65, புங்கன்குளம் வீதி, கொழும்புத்துறை. 5825

ஒழுக்கமும் பண்பும் உள்ள வரும் 40 வயதுக்கு மேற்பட்டவரும் வீட்டிலேயே தங்கி வீட்டுவேலைகளிலும் உதவி செய்யக்கூடியவருமான காரசாரகி உடனே தேவை. மெக்கானிக் அனுபவம் உள்ளவராக இருந்தால் விரும்பத்தக்கது. நற்சான்றிதழ்களுடன் எதிர்பார்க்கும் சம்பளத்தைக் குறித்து விண்ணப்பிக்கவும். 484, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். 5824

விற்பனைக்கு

நல்ல நிலைமையிலுள்ள 'ஹொண்டா' (HONDA) 125 C C மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. ஸ்ரார் ரேணிங்வேக்ஸ், 233, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 5830

அறிவித்தல்

சோலைவரி 1-ம்கந்தாயம் 1977

சங்கானைப் பட்டினசபையின் பிரதேசத்திலுள்ள ஆதனங்கள் யாவற்றிலுமுள்ள சோலைவரிப் பணங்களின் முதலாம்கந்தாயத்தின் கொடுப்பனவு சம்பந்தமாக சுலநீடிப்பு 30-ந் திகதி ஏப்பிரல் மாதம் வரையும் கொடுக்கப்பட்டுள்ளது. இத்திகதிக்குமுன் யாவரும் பணத்தைச் செலுத்தும் வண்ணம் கேட்கப்படுகின்றனர். இத்திகதிக்குப்பின் 10 வீதம் வெலியாத்திப்பணமும் சேர்த்து அறவிடப்படும்.

சி. க. திருச்சிற்றம்பலம்
தலைவர்,
பட்டினசபை, சங்கானை.
30-3-77 5829

விற்பனைக்கு

தர்மக்கேணி பளையில் 6 ஏக்கர் புதிய தென்னம்பிள்ளைக் காணி விற்பனைக்குண்டு. விபரங்கட்கு தொடர்புகொள்ளவும். 29/3, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 5819

கட்டுடை
அரசடிப்பிள்ளையார் ஆலய
தேர்த்திருப்பணி
அதிர்ஷ்டலாபச்சீட்டு

3-4-77 ஞாயிற்றுக்கிழமை அதிர்ஷ்டம் பார்க்க இருந்த சீட்டிழுப்பு, தவிர்க்க முடியாத காரணத்தினால்வேறொருதினத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. புதிய சீட்டிழுப்புத்தினம் இப்பத்திரிகை மூலம் அறிவிக்கப்படும்.

கட்டுடை அரசடிப்
பிள்ளையார் ஆலய
தேர்த்திருப்பணிச்சபை
5815

பாண் எடையில் மோசடி

அபராதம் 100 ரூபா

யாழ்ப்பாணம், வெள்ளி

ஒன்றரை அவுன்ஸ் நிறைகுறைவான பாணை விற்றதாக ஆனைக்கோட்டைப் பகுதி பேக்கரி உரிமையாளர் ஒருவருக்கு ரூ. 100 அபராதம்விதிக்கப்பட்டது.

விலைக்கட்டுப்பாட்டு இன்ஸ்பெக்டர் திரு. என். சண்முகம் தலைமையில் சென்ற கோஷ்டி இந்த நிறைகுறைவான பாண் விற்பனையைக் கண்டு பிடித்தது.

யாழ். நீதவான் திரு. நவரட்ணம் இந்த அபராதத்தை விதித்தார்.

• • •

கூட்டணிக் கிளை

யாழ்ப்பாணம், வெள்ளி

மானிப்பாய்ப் பட்டினசபை வட்டாரத் தமிழர் விடுதலைக் கூட்டணிக் கிளை நாளை நிறுவப்படவிருக்கிறது. உடுவில் வீதியில் சு. செல்லத்துரையின் இல்லத்தில் திரு. வி. தர்மலிங்கம் தலைமையில் இக்கிளை நிறுவப்படும். (அ)

தேவை

தச்சுவேலைகளுக்கு நாளாந்தச் சம்பள அடிப்படையில் ஐந்து வருஷத்துக்குக் கூடிய அனுபவம் உள்ள தொழிலாளர்கள் தேவை.

நற்சாட்சிப்பத்திரங்களுடன் 18-4-77-ல் நேரில் வரவும்.

பொது முகாமையாளர்
சீ—நோர் அபிவிருத்தி நிறுவனம்
காரைநகர், 5831

பிரியாவிடை விருந்துபசாரம்

வட்டுக்கோட்டைஇந்துக்கல்லூரி சித்தன்கேணி உபஅதிபர் திரு.கு.சிவசுப்பிரமணியம் அவர்களுக்கு 6-4-77 புதன்கிழமை பி.ப. 6-30மணிக்கு கல்லூரி வள்ளியம்மை மண்டபத்தில் நடைபெறும்.

இதற்கான கட்டணம் எட்டு ரூபாவையும் திங்கட்கிழமை (4-4-77)க்கு முன்னர் பங்குகொள்ள விரும்பும் பெற்றார், பழையமாணவர், முன்னைநாள் ஆசிரியர்கள் ஆசிரியர் கழக செயலாளருக்கு சம்மதத்துடன் அனுப்புமாறு எதிர்பார்க்கப்படுகின்றனர்.

பெற்றார் ஆசிரியர் சங்கம்,
ஆசிரியர் கழகம்.
5827

உலகின் ஒரே ஒரு இந்து ராஜ்யமான நேபாளத்தில் மதப்பூசல் எதுவும் இதுவரை ஏற்பட்டதில்லை!

உலக மத மகாநாட்டில் மன்னர் பிரேந்திரா உரை

மதுரை, மார்ச். 31

"மதங்கள் இருளில் வாழ்ந்துகொண்டிருப்பவர்களை ஒளிக்குக் கொண்டுவந்து சத்தியம் நிலைபெற உதவுகின்றன" என்று மதுரையில் நேற்று காந்தி மியூசியத்தில் ஆரம்பமான உலக மத மாநாட்டை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் நேபாள மன்னர் திரு. பிரேந்திரா கூறினார்.

ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரியச் ஸ்ரீஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் முன்னிலையில் மாநாட்டை மன்னர் ஆரம்பித்து வைத்தார்.

இசைமணி சீர்காழி கோவிந்தராஜனின் 'விநாயகனே' என்று ஆரம்பமாகும் துதிப்பாடலுடன் மாநாடு ஆரம்பமாகியது மன்னர் தம்பதியின பூரண கும்பம் வைத்து வரவேற்கப்பட்டனர்.

மன்னர் தமது உரையில் மேலும் கூறியதாவது 'மதங்கள் மனித சமுதாயம் இன்று சென்றுகொண்டிருக்கும் நிலையில் வழிகாட்டிகளாக உள்ளன. கெட்டவர்கள் நல்லவர்களாக மதங்கள் காரணமாகின்றன எனவே மதவளர்ச்சி ஊக்குவிக்கப்படவேண்டும்.

உலகில் ஒரே ஒரு இந்து ராஜ்யமாகநேப்பாளம் விளங்குகின்றது. ஆனால் அங்கு சகல மதங்களுக்கும் மதிப்புண்டு. எந்த மதமும் கட்டுப்படுத்தப்படவில்லை. மதத்தின்பேரால் நேப்பாளத்தில் இதுவரையில் எந்தவொரு அசம்பாவிதச் சம்பவமும் ஏற்பட்டதில்லை.

சங்கராச்சாரிய சுவாமிகள் உரை

ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராச்சாரிய ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் பேசுகையில், மனிதனை மனிதனுக்கு வாழவைப்பதற்கு மதத்தலங்கள் வழிகாட்டிகளாக அமைகின்றன. தாம் சார்ந்து நிற்கும் மதத்தின் மீது ஆழமான ஆர்வம் கொண்டிருக்கவேண்டும். மனம் பண்படவும், வாழ்வில் பக்தியுடன் கூடிய பிடிப்பு ஏற்படவும், சமுதாயம் சத்திய வழியில் செல்லவும் மதங்கள் பயன்படுகின்றன" என்றார். மனிதன் தோன்றிய உடனே அவனுக்குப் பிரச்னைகளும் தோன்றின, பிரச்னைகள் தோன்றினவுடனே மதங்களும் தோன்றின என்றார் சுவாமிகள் ஒரு மதத்தைச் சார்ந்திருப்பது பெரிதல்ல, அம்மதத்தில் சொல்லப்படுவதின்படி நடப்பதே பெரியது என்றார்.

இந்த மாநாட்டுக்கு தமிழ்நாடு கவர்னர் திரு. மோகனால் சுகார்தியா அனுப்பியிருந்த செய்தியில், மதங்களின் பேராலும், அனுஷ்டானங்கள் அடிப்படையிலும், வேறுபாடுகளும், குழப்பங்களும் நேர்வதுகவலைக்குரியது. ஏனென்றால் அனுஷ்டானங்கள் அல்ல மதங்களின அடிப்படைகளே முக்கியம். அடிப்படைஉண்மைகள் அனைத்துமே ஒன்றுதான் என்று குறிப்பிட்டிருந்தார்.

தலாய்லாமாவின்செய்தியை அவரது பிரதிநிதி வாசித்தார். தொடர்ந்து ஏழுநாட்கள் நடைபெறும் இம்மாநாட்டில் பல்வேறு நாடுகளிலுமிருந்து அறிஞர்களும், சமயத்தலைவர்களும் மாநாட்டில் கலந்துகொள்கிறார்கள்.

காங்கிரசிலிருந்து சஞ்சய் ராஜினாமா

புதுடில்லி, மார்ச். 31

திருமதி இந்திராகாந்தியின் புதல்வரும், கடந்த லோக்சபா தேர்தலில் போட்டியிட்டு தோல்வியைத் தழுவியவருமான திரு. சஞ்சய்காந்தி காங்கிரஸ் கட்சியின் தேசியகுழுவிலிருந்து ராஜினாமாச் செய்துள்ளார்.

திரு. சஞ்சய்காந்தி உட்பட காங்கிரஸ்தலைவர் திரு. பரூவா, முன்னாள் மத்திய அமைச்சர்கள் சுக்லா, பன்சிலால், ஓம் மேத்தா ஆகியோர் காங்கிரஸில் இருந்து விலகவேண்டும் என்று புதுடில்லியில்கூடியகாங்கிரஸ் உறுப்பினர்கள் 100பேர் கோரிக்கை விடுத்திருந்தது தெரிந்தது.

ஆனால் எக்காரணத்தைக் கொண்டு திரு. சஞ்சய் காந்தி ராஜினாமாச்செய்தார் என்பது பற்றிய கட்சியின் உத்தியோகபூர்வ அறிக்கை எதுவும் வெளியிடப்படவில்லை.

கடந்த பொதுத்தேர்தலின் போது தமது போக்குத்தான் காங்கிரஸ் தோல்வியுறுவதற்கும் திருமதி காந்திதோல்வியுற்றதற்கும் காரணம் என்றானால் அதற்காகத்தான் மனம் நொந்து மன்னிப்புக்கோருவதாக இவர் வெளியிட்ட அறிக்கை ஒன்றால் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

காங்கிரஸ் செயற்கமிட்டியிலிருந்து முன்னாள் மத்திய அமைச்சர் திரு. பன்சிலால் ராஜினாமாச் செய்துள்ளதாக டெல்லியிலிருந்து பிந்திக் கிடைத்த செய்தி ஒன்று கூறுகிறது.

காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. பரூவாவின் கோரிக்கையின் பேரில் திரு. பன்சிலால் ராஜினாமாச்செய்ததாகக்கூறப்படுகிறது. (உ)

...

பரூவா கோரிக்கை

புதுடில்லி, மார்ச் 31

"லோக்சபாத்தேர்தலில் காங்கிரஸ் தோற்றது பற்றிக் கவலைகொள்ளவேண்டாம். உறுப்பினர்கள் அனைவரும் புதிய வேகத்துடனும், உற்சாகத்துடனும் கட்சி வளர்ச்சிக்காகப் பாடுபடவேண்டும், என்று காங்கிரஸ் தலைவர் திரு. பரூவா புதுடில்லியில் கட்சி உறுப்பினர்கள் மத்தியில் பேசுகையில் கூறினார். (உ)

தமிழ்நாட்டுத் தேர்தலில் பணம் விளையாடியதா?

(நமது நிருபர்)

திருநெல்வேலி, மார்ச் 31

தமிழ்நாட்டுத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி வெற்றிக்கு பணம்தான் காரணம் என்று மொரார்ஜி கூறியிருப்பது உண்மைக்கு புறம்பானதாகும், என்று முன்னாள் தமிழ்நாடு சபாநாயகர் கூறியுள்ளார்

தமிழ்நாடு உட்பட தென்னாட்டில் காங்கிரஸ் பெரும் வெற்றிபெற்றதற்கு காரணம் என்ன? என்று பிரதமர் மொரார்ஜி தேசாயிடம் நிருபர்கள்கேட்டதும் அவர் பணம் தான் காரணம் என்று கூறியதும் தெரிந்ததே.

இது குறித்து செல்ல பாண்டியன் ஒரு அறிக்கையில் கூறியிருப்பதாவது;

'தமிழ்நாட்டில் காங்கிரஸ் கட்சி செய்துள்ள நன்மைகளால்தான் காங்கிரஸ் கட்சிக்கு தமிழ்நாடு மக்கள் வாக்குப் போட்டார்கள். ஜனதாகட்சி ஊழல் புரிந்தவர்களுடன் கூட்டுச் சேர்ந்ததால்தான் தமிழ்நாட்டில் மக்களின் நம்பிக்கை பெறமுடியவில்லை. (உ)

வேலூரில் ரயில் விபத்து: 6 பேர் பலி; 56 பேர் காயம்

சென்னை, மார்ச் 31

வேலூரில், காட்பாடிக்கு அருகே நேற்றுப்பகல் நடைபெற்ற ரயில் விபத்தொன்றில் 6பேர் கொல்லப்பட்டனர். 56பேர் காயமடைந்தனர்,

பெங்களூரில்இருந்துசென்னை நோக்கி வந்துகொண்டிருந்த எக்ஸ்பிரஸ் ரயிலே காட்பாடிக்கு அருகே அரைக்கோணம் பாதையில் தடம்புரண்டது. இவ்விபத்தில் இறந்த இருவரது சடலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இதில் ஒருவர் ரயில் ரிக்கற் பரிசோதகரான மேனன் என்றவர்; மற்றவர் கோள் வாசியாவார்.

இவ்விபத்தில் 5 ரயில்பெட்டிகள் சேதமடைந்தன.

இவ்விபத்து நாசவேலை காரணமாக நடந்திருக்காது என்று ரயில்வே உயர் அதிகாரி திரு. சாம்பமூர்த்தி கூறினார். (உ)

"சீன - இந்திய நட்புறவு மேலும் வளர வேண்டும்"

தேசாய்க்கு சீனப் பிரதமர் வாழ்த்து

புதுடில்லி, மார்ச் 31

புதிய பாரதப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய்க்கு சீனப் பிரதமர் திரு. குவா-ஹுவா-பெங் வாழ்த்துச் செய்தி ஒன்றினை அனுப்பி வைத்துள்ளார்.

"எமது இரு நாடுகளுக்கும் இடையேயான நட்புறவு மேன்மேலும்வளரவேண்டும்என்பது விருப்பம்" என்று சீனப்பிரதமர் தமது மேற்படி வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.

திரு. மொரார்ஜிதேசாய்க்கு அவுஸ்திரேலியப் பிரதமரும் வாழ்த்துச்செய்தி ஒன்றினை அனுப்பிவைத்துள்ளார்.

சீனாவுடன் நட்பை வளர்க்க விருப்பம்

இது இவ்வாறு இருக்க, பாரதத்தின் வெளிநாட்டுக் கொள்கையில் உடனடி மாற்றங்கள் எதுவும் மேற்கொள்ளப்படமாட்டாது என்று பாரத வெளிநாட்டமைச்சர்

திரு. வாஜ்பாய் கூறினார்.

முதன்முதலான புதுடில்லியில் திரு. வாஜ்பாய் நடத்திய செய்தி நிருபர்கள் மகாநாட்டில் இத்தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் கூறியிருப்பதாவது:

"முன்னைய ஆசாங்கம் கைக்கொண்ட வெளிநாட்டுக் கொள்கையையே புதிய அர

(5-ம் பக்கம் பார்க்க)

ஆயுதக் கட்டுப்பாடு உடன்படிக்கை:

சோவியத் - அமெரிக்க பேச்சுவார்த்தைகள் தோல்வி

மாஸ்கோ, மார்ச் 31

ஆயுதக் கட்டுப்பாடு உடன்படிக்கை தொடர்பாக சோவியத் யூனியனுக்கும் அமெரிக்காவுக்கும்இடையே மாஸ்கோவில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் தோல்வியில் முடிந்துள்ளன.

ஆயுதக்கட்டுப்பாட்டு உடன்படிக்கை தொடர்பாக அமெரிக்கா தெரிவித்த இரு ஆலோசனைகளை சோவியத் யூனியன் நிராகரித்ததனையடுத்து பேச்சுவார்த்தைகள் தோல்வியில் முடிந்தன.

சோவியத்யூனியன் கம்யூனிஸ்ட் கட்சித்தலைவர் திரு. பிரஷ்னேவ், வெளி நாட்டமைச்சர் திரு குரோமிக்கோ, அமெரிக்க வெளிநாட்டமைச்சர் திரு. சைரஸ்வான்ஸ் ஆகியோர் இப்பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டனர்.

பேச்சுவார்த்தைகளையடுத்து வாஷிங்டனில் வைத்து திரு. சைரஸ்வான்ஸ் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் சோவியத் யூனியன் ஆயுதப்படையை வலுப்படுத்தும் வகையில் செயற்படாது என்றநம்பிக்கை தமக்கு உண்டென்றும் அதற்கு மாறாக சோவியத் யூனியன் நடந்து கொண்டால் அது கேடு பயப்பதாகவே அமையுமென்றும் கூறியுள்ளார்.

கார்ட்டர் கருத்து

இதேவேளை, மாஸ்கோவில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் தோல்வியுற்றுள்ள போதிலும் பேச்சுவார்த்தைகள் பயனுள்ள வகையில் நடைபெற்றிருப்பதாக அமெரிக்கஜனாதிபதி திரு. ஜிம்மி கார்ட்டர் கூறியிருக்கிறார். (உ)

இந்திரா தோல்வியைத் தாங்க முடியவில்லை

அழுதபடி உயிரைவிட்டார்

(நமது நிருபர் சாந்தா)

சென்னை, மார்ச் 31

முன்னாள் பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி தோல்வியடைந்த செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்த ஒருவர் மயக்கமுற்று மரணமானார்.

உடுமலைப்பேட்டை காங்கிரஸ்கட்சி உதவித் தலைவரான சாந்த்முகம்மது (வயது 34) என்பவரே மரணமானவராவர்.

இந்திரா தோல்வி அடைந்த செய்தி கேட்டு, மனமுடைந்த இவர் தேம்பித் தேம்பி அழுதாராம். பின்னர் திடீரென மயக்கமுற்று அருகில்நிந்த ரகமத்துல்லா என்பவரின் மடியில் சாய்ந்தாராம். அந்நேரம் அவரது உயிர் பிரிந்துவிட்டது.

இவரது இறுதிச் சடங்கில் அ. இ. அ. தி. மு. க. எம். பி. திரு. ராஜு கலந்து கொண்டார். (உ)

மணிவாக்கு

செல்வம் உள்ள மூடரினும் வறுமையுள்ள வித்துவான்களே நன்கு மதிக்கப்படுவார்கள். -ஆறுமுகநாவலர்

ஈழநாடு
THE EELANADU

உல்லாசப் பிரயாணிகள்

இலங்கைக்கு வரும் வெளிநாட்டவர்கள் ஒவ்வொருவரும், ஒரு நாட் செலவுக்குக் குறைந்தது மூன்று டாலர் வீதம் இங்கு தங்கியிருக்கப்போகும் நாட்களுக்குரிய தொகையைக் காண்பிக்கவேண்டும்.

போதை வஸ்துத் தடுப்புப் பொலிஸ் பிரிவின் ஆலோசனையின் மீது அரசு இந்தப் புதிய திட்டத்தை மேற்கொண்டுள்ளது.

உல்லாசப் பிரயாணம் ஓர் இலாபகரமான தொழில் உலக நாடுகள் பலவும் உல்லாசப் பிரயாணத்திற்கு ஊக்கம் அளித்துவருகின்றன.

இயற்கைக் காட்சிகள், செயற்கைக் காட்சிகள் முதலியவற்றை மெருகூட்டி, உல்லாசப் பிரயாணிகளின் கவனத்தை ஈர்ப்பதற்கு உலக நாடுகள் பலவும் பெரும் முயற்சி செய்கின்றன.

தங்கள் நாட்டுக் கலை, கலாச்சாரம் பற்றியும் தங்கள் நாடுகளிலுள்ள இயற்கைக் காட்சிகள் பற்றியும் வெளிநாடுகளில் பிரசாரம் செய்கின்றன.

இவை பயனளிக்காமல் இல்லை. உல்லாசப்பிரயாணிகளின் தொகை அதிகரிக்க நாட்டின் வருமானமும் அதிகரிக்கும்.

அதிக வருமானம் பெறக்கூடிய தொழில், உல்லாசப் பிரயாணத் தொழில் என்று கருதிய நமது நாட்டு அரசும் இதற்கு ஊக்கமளிக்க முன்வந்தது.

இதன் பயனாகக் கடந்த ஏழு ஆண்டுகளுக்குள் கொழும்பு நகரில் பெரிய பெரிய நவீன ஹோட்டல்கள் எழுந்துள்ளன. தலைநகரில் மட்டுமல்ல, அதை அடுத்த கரையோரப் பகுதிகளிலுங்கூட நவீன வசதிகளையுடைய பெரிய ஹோட்டல்கள் தோன்றியுள்ளன.

இதன் மூலம் உள்நாட்டில் பலருக்கு வேலைவாய்ப்புக் கிடைத்திருக்கிறது; உள்நாட்டு உற்பத்திப் பொருட்கள் மவுசுடன் விலைபோகின்றன; நமது உற்பத்திப் பொருட்களுக்கு வெளிநாடுகளிலும் கிராக்கி ஏற்படுகிறது. அந்நியச் செலாவணியும் அதிகரிக்கின்றது.

உல்லாசப் பிரயாணத் தொழிலால் நமக்குக் கிடைக்கும் நன்மைகள் இவை மட்டுமல்ல. இன்னும் பலவுண்டு.

ஆனால் எந்தத் தொழிலுக்கும் சட்டதிட்டமும், கட்டுப்பாடும்இல்லையெனில் அதனால் ஏற்படக்கூடிய நன்மைகளைவிடத் தீமைகளே அதிகரிக்கக்கூடும்.

உல்லாசப் பிரயாணத்திற்கு ஊக்கமளிக்கத் தொடங்கியதும் எங்கேயும் எப்படியும் வாழலாமென்ற ஹிப்பிகளே இங்கு அதிகமாகப் படையெடுக்கத் தொடங்கினார்கள்.

இவர்களிற் பலர் இங்கு வரும்போது செலவுக்கென்று சிறிது பணம்கூடக்கொண்டு வருவதில்லையென்பது சமீபத்தில்தான் பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவந்திருக்கின்றது.

இந்த உல்லாசப் பிரயாணிகள் நமது நாட்டுக்கு அறிமுகமேயில்லாத ஒரு வித போதை மருந்துகளையும், அபின், கஞ்சா போன்ற பொருட்களையும் இங்கு கொண்டுவந்து வெளிநாட்டிலிருந்து இங்கு வருபவர்களுக்கும், உள்நாட்டவர்களுக்கும் விற்று, அந்தப் பணத்தில் அவர்கள் இங்கு உல்லாசமாகப் பொழுதைக் கழிக்கின்றனர்.

இந்தப் போதை வஸ்துக்களால் நமது நாட்டுக்குப் பெரும் தீங்கு வந்துகொண்டிருப்பதைப் போதை வஸ்துத் தடுப்புப் பொலிஸார் எச்சரித்துள்ளனர்.

உல்லாசப் பிரயாணத் தொழிலுக்கு ஊக்கமளிக்க முன்வந்துள்ள சமயத்திலேயே இந்த ஆபத்துக்கள் பற்றி ஆராய்ந்திருந்தால் இதுவரை ஏற்பட்ட கெடுதிகளைத் தவிர்த்திருக்கலாம்.

இப்போதாவது இங்கு வரும் வெளிநாட்டவர் குறைந்தது நாளுக்கு மூன்று டாலர் வீதம் தமது செலவுக்குக் கொண்டுவரவேண்டுமென்ற கட்டுப்பாடு விதித்திருப்பது போதை வஸ்துக்கள் நுழைவதை முற்றுகத் தடுக்காதுபோனாலும் கட்டுப்படுத்துவதற்கு உதவும் என்று எதிர்பார்க்கலாம்.

இந்த மாதிரிப் போதை வஸ்து உல்லாசப் பிரயாணிகளுக்குக் கட்டுப்பாடு விதித்துக் கண்காணிப்புச் செலுத்தும் அதேசமயம் இலங்கையின் புனித ஸ்தலங்களைத் தரிசிப்பதற்காகவரும் உண்மையான யாத்திரிகர்களுக்கும் வெளிநாடுகளிலுள்ள புனித ஸ்தலங்களைத் தரிசிக்கச் செல்லும் உண்மையான யாத்திரிகர்களுக்கும் அதிக கெடுபிடிகள் இல்லாமற் பார்த்துக்கொள்வது நாட்டின் நன்மதிப்பை உயர்த்த உதவுவதாக இருக்கும்.

அச்சுவேலியில் நாளை நடைபெறும் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், வெள்ளி

'இலங்கை விஞ்ஞான அறிவியல் பரப்புக் கனிஷ்ட சங்கம் (யாழ்ப்பாணம்)' கருத்தரங்கு நாளை அச்சுவேலி மகாவித்தியாலயத்தில நடைபெறவிருக்கிறது.

பேராசிரியர் வீ.கே. கணேசலிங்கம் தலைமையில் நடைபெறும் இக் கருத்தரங்கில் காலை நிகழ்ச்சியில் யாழ் மேலதிகக் கல்வித்தலைமை அதிகாரி திரு. கே. சிவநாதன் தொடக்கவுரை நிகழ்த்துவார். 'பூச்சிப்பீடையும் கிருமிநாசினியும்' பற்றி விவசாய அதிகாரி திரு. ஆர். தில்லையம்பலமும், கோழி வளர்ப்பும் கோழி உணவு தயாரித்தலும்' பற்றி கால்நடைவைத்தியர் திரு. ரி. சுதிரவேலுப்பிள்ளையும் உரையாற்றுவர்.

மாலை நிகழ்ச்சியில் 'மண்வளமும் நீர்வளமும் பற்றி யாழ். நிலநீர் ஆய்வாளர் திரு. கே. நடனசபாபதியும், 'மனித போஷாக்கு—உள்நாட்டுப் பண்டங்களிலிருந்து' பற்றி சுகாதார அதிகாரி வைத்தியகலாநிதி எம். வேலும்மயிலும் உரையாற்றுவர்.

.....

புதிய தலைவர்

சுழிபுரம், வியாழன்

பண்ணாகம் அண்ணாகலை மன்றத்தின் புதிய தலைவராக பண்டிதர் ப. இராசகுரு ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டுள்ளார். (அ)

புங்குடுதீவு

இகலோக கைலாச மகா கும்பாபிஷேகம்

[புங்குடுதீவு கிராஞ்சியம் பதிசிவாலயத்தில் நாளை மறுதினம் மகாகும்பாபிஷேகம்நடைபெறுகிறது.]

புங்குடுதீவில் இகலோக கைலாசமாக எழுந்து நிற்பது பெருங்காடு கிராஞ்சியம் பகுதியிலுள்ள ஸ்ரீ மீனாட்சியம்பாள் சமேத சோமசுந்தரேஸ்வரப் பெருமான் ஆலயமாகும். இவ்வாலயத்து சிவலிங்கம் காசிலிங்கமாகும். இக்கோவில் குருவாயிருந்த பிரம்மஸ்ரீ த. மார்க்கண்டேய ஐயர் அவர்கள் காசியிலே தீர்த்தம் ஆடியபோது அவர் கண்ணிலே இந்த லிங்கம் தென்பட்டது. இதை எடுத்து வரும்பொழுது தேவகோட்டையிலே மீனாட்சியம்பாளும் கிடைக்கப்பெற்றாள். பரமேஸ்வரன் வடநாட்டிலே அரு உருவத் திருமேனியாக புங்குடுதீவு நோக்கிப் புறப்பட தென்னாட்டிலே அம்பாள் உருவத்திருமேனியாகி பயணத்தில் சேர்ந்து கொண்டாள்.

ஸ்ரீமார்க்கண்டேயஐயர் மிகுந்த சிரமத்துடன் எடுத்துவந்த இத்தூல உருவங்கள் கிராஞ்சியம்பதியிலே கோவில்கொண்டெழுந்தருளின. மார்க்கண்டேயஐயரின் மனைவியார் செல்வநாயகிஅம்மாவின்முயற்சியாலும் அடியார்களின்உதவியுடனும் வளர்ந்தோங்கிய கிராஞ்சியம்பதி சிவன்கோவில் பலவிதமான சமய நிகழ்ச்சிகள் நடைபெற இடமளித்திருக்கிறது.

திருக்கோவில்களிலே தமிழ் அர்ச்சனையை நடைமுறைப்படுத்திய தவத்திரு குன்றக்குடி அகளார் இங்கும் வந்து தானே திருமுயற்களை ஓதி தமிழ் அர்ச்சனையைத் தொடக்கி வைத்தார். அன்றைய தமிழ் அர்ச்சனையைச் செய்த பிரம்மஸ்ரீ ஐ. கைலாசநாதக் குருக்களே இப்பொழுது இக்கோவில் கும்பாபிஷேகத்தை பிரதம குருவாயிருந்து நடாத்தப்போகின்றார் என்பது தமிழ்ப்பற்றும் சிவசம்பந்தமுமுடையவர்க்கு பெருமகிழ்வைத்தருவதாகும்.

முப்பது மூன்று குண்டங்களோடு கூடிய உத்தமோத்தம மகா கும்பாபிஷேகம் இக்கோவிலிலே இம்மாதம் 3-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9-45 மணியளவில் நடைபெற உள்ளது, இக் கும்பாபிஷேகத்திற்கு வருகின்ற அடியார்கள் அமைதியாக நின்று வழிபாடுசெய்வதற்காக மீனாட்சி சுந்தரேஸ்வரர் அன்னதானசபையினர் வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய மூன்று நாட்களுக்கும் வெளியிடங்களில் இருந்துவரும் அடியார்களுக்கு அன்னதானம் வழங்குவதற்கு ஏற்பாடுசெய்துள்ளனர். கும்பாபிஷேக தரிசனத்தைக் கண்டு தியான முறையில் யோகசித்திகளை பெற்றுய்வதற்காக மெய்யடியார்களை விரைந்துவரும்படி புங்குடுதீவு மக்கள் அழைக்கிறார்கள்.

-ஈழத்துச் சிவானந்தன்

நலங்கள் கொடுக்கும் திருக்கோயில்

— ஆசிரியமணி ஆர். ரீ. சுப்பிரமணியம் —

இலங்கைத் தீவில்
வடதிசையில்
இலங்கும் புளியம்
பொக்கணையில்
நலங்கள் கொடுக்கும்
திருக்கோயில்
நாதத் தம்பிரா னருளால்
கலங்கள் பொலியும்
பாலோடு
கனியும் நாகம் உண்ணவரும்
துலங்கும் இந்த
அற்புதத்தைத்
தொக்கு மக்கள்
கண்டிடுவார்.

இவ்வாறு வாகீசகலாநிதி—கலைமகள் ஆசிரியர் கி. வா. ஜெகந்நாதன் போற்றிப் பரவும் கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் சிவன் கோயில் ஆண்டுப் பொங்கல் 3-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு நிகழும்.

இ. போ. ச. சந்நிதானம் வரை சேவைபுரியும். பல்லாயிரக்கணக்கான அடியார்கள் வந்து வழிபாடு ஆற்றும் இத்தலம் பரந்தன் சந்தியிலிருந்து பத்துக்கல் தொலைவில் மருதநிலம் சார்ந்த கண்டாவளைக் கப்பாலுள்ளது.

இத் தலம் ஒல்லாந்தர்காலத்தில் நீதிநாயக முதலியாரால் இறைவன் கனவில் இட்ட கட்டளைப்படி நிறுவப்பட்டு அவரின் வழித்தோன்றல்

(5-ம் கலத் தொடர்ச்சி)

னும் இம்முயற்சி தடைப்பட்டிருக்கிறது. இக்கோயில் தேரும், கோபுரமும் சீக்கிரம் கட்டி முடிக்கவும், யாழ்ப்பாணம் தலைதூக்கி, தாழ்வுற்ற தமிழரின் நிலை மேலோங்கச் செய்யவும் இங்கு கோயில் கொண்டுள்ள இறைவன் மக்களை ஊக்கிவைப்பானென்றே உளமாரப் பிரார்த்திப்போம். நல்ல மனதுடன். தக்கவர்கள் முயற்சி எடுத்தால், இறைவன் அருளும், மக்களின் ஆதரவும் அமோகமாகக் கிடைக்குமென்பதில் சிறிதும் சந்தேகமில்லை. அடுத்த வருடத் திருவிழாவிலாவது இங்கு புதுத் தேர் ஓடுமா?

கரம்பொன் தெற்கு

த. கூட்டணி கிளை

யாழ்ப்பாணம், வெள்ளி

கரம்பொன் தெற்கு தமிழர் விடுதலைக்கூட்டணிகிளை, ஊர்காவற்றுறை எம்.பி. திரு. கா. பொ. இரத்தினம் தலைமையில் நடந்த கூட்டத்தில் அமைக்கப்பட்டது. தலைவர் திரு. எஸ். பஸ்தியாம்பிள்ளை. துணைத் தலைவர் கே. நடராசா, செயலாளர் திரு. என். பத்திநாதர், துணைச் செயலாளர் எஸ். மருதையினர் பொருளாளர் திருமதி சிஸிலியா அல்பிரட். 11பேர்கொண்ட நிர்வாகசபையும் தெரிவுசெய்யப்பட்டது.

அதன் பின்னர் நடந்த கருத்தரங்கில் திரு. கா. பொ. இரத்தினம் எம் பி, திரு. வி. தியாகராசா மற்றும் பலர்பேசினர்.

—

சமய தீட்சை

சுழிபுரம், வியாழன்

சுழிபுரம் பெரிய தம்பிரான் கோயிலில் பங்குனி உத்தரவிழா அன்று சமய தீட்சை அளிக்கப்பட வுள்ளது. சிவ தீட்சை வைக்காதவர்கள் அன்று தீட்சைபெற்றுக் கொள்ளலாம். வேற்படைத் தொண்டர்களால் ஏற்பாடு செய்பாடு செய்யப்பட்டுள்ள இத் தீட்சையில் இளையோர்கள் கலந்து பயன்பெறுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (அ)

ஐயாறன் எழுதுவது

சென்ற மாசி மகத்தன்று மாத்தளை முத்துமாரி அம்மன் கோயிலில் நடைபெற்ற தேர்த் திருவிழாவுக்குச் சென்றிருந்தேன். சுமார் இரண்டு லட்ச ரூபாய் செலவில் புதுத் தேர் கட்டியுள்ளனர். நாடெங்கும் உள்ள அன்பர்கள் பணத்தை அள்ளி அள்ளிக் கொடுத்தனராம்.

நல்லூர், நயினாதீவுத் தேர்களை விட இது பெரிதென்றும் சொன்னார்கள். பெண் தெய்வத்துக்காகப் பெரிய சித்திரத் தேர் செய்து, பெண்மையைப் போற்றி மகிழும் நம்மவர்களின் பண்பை நினைக்கநினைக்க மனம் நெகிழ்ந்தது.

தேரை இழுத்ததில் பெரும்பாலோரும் பெண்களே. ஆண்களின் உதவி இல்லாமல் பெண்களே தேரை இழுத்து விடமுடியுமா? என்று கேட்டதும், எங்கள் அம்மாவின் தேரைப் பெண்களாகிய நாங்களே இழுத்துவிடமுடியும், ஆண்களின்உதவி எங்களுக்குத் தேவை இல்லையென்றும் வடம் பிடித்த ஒரு கல்லூரி மாணவி மிடுக்குடன் கூறினார். படித்தவர், பாமரர், ஏழை, பணக்காரன், தமிழர், சிங்களவர், தாழ்த்தப்பட்டோர், மற்றவர்கள், ஆண், பெண் என்ற வேற்றுமையின்றி ஊர் மக்களில் பலரும் தேரை இழுத்து, அம்மாவின் பெயரால் ஊரை ஒற்றுமைப்படுத்தி வருவதைக் கண்டபோது, தேர்த்திருவிழாவின் மேலான நோக்கத்தை உணர முடிந்தது. ஆங்காங்கே அன்னதானங்களும் நடந்தன,

மாத்தளைக்குப் புதிதாக ஒரு சிங்கள அன்பர் மாவட்ட நீதிபதியாக மாற்றலாகிவந்திருக்கிறார். அவர் தேரின் வலது பக்கமுள்ள வடத்தை முதலில் நின்று இழுக்க, அவரது மனைவியார் இடதுபக்க வடத்தைத் தலைப்பில் நின்று பக்தியுடன் இழுத்த காட்சியைக் கண்டேன். மாத்தளை அம்மனின் ஒற்றுமைச் சக்தியை நேரில் காணக்கூடியதாக இருந்தது. சென்ற சேகுவேரா கலகங்களின்போது, மாத்தளையில் பூரண அமைதி நிலவியதாகவும், தங்கள் மாரியம்மாதான் தங்கள் ஊரைக் காத்ததாகவும் அந்த ஊரன்பர் ஒருவர் மகிழ்ச்சியுடன் கூறினார்.

● ● ●

தேர்த் திருவிழாவின் நோக்கத்தைப் பற்றிப் புராணங்கள் என்னகூறினாலுஞ்சரி, ஊர் மக்களை ஒற்றுமைப்படுத்துவதையும் சாதி முதலிய வேற்றுமைகளை மறந்து, தெய்வீகப் பணியில் மக்கள் ஒற்றுமையாக ஈடுபடுவதையும் பார்க்கும்போது, புதுப்புதுத் தேர்கள் ஆங்காங்கே கட்டப்படுவதும் வரவேற்கத்தக்கதே அல்லவா? தெய்வத்தைத் தவிர மக்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்த வேறென்ன வழி? தெய்வத்தின் பெயரால் சமூக சேவைகளை எவ்வளவோ செய்யலாமல்லவா?

வண்ணார்பண்ணை கடைத்தெருப் பிள்ளையார் கோயில் புதுத் தேர், அழகாக வெகு சீக்கிரத்தில் கட்டப்பட்டு, இம்முறை திருவிழாவும் சிறப்பாக நடந்ததைப் பற்றி ஓரன்பர் மகிழ்ச்சியுடன் சொன்னார். ஆனால் அவரே வண்ணை சிவன் கோயில் தேர் இன்னமும் கட்டப்படாதது குறித்து ஏமாற்றமும் வருத்தமும் தெரிவித்தார். ஊருக்கும் கோயிலுக்கும் அழகும் சிறப்புமளிப்பது தேர்தான். மாத்தளை வீதியில் புதுத் தேர் ஓடும்போது ஊரே எவ்வளவு அழகுபெற்றது! சில வருடங்களுக்கு முன்பாக வண்ணார்பண்ணையில் புதுத் தேர் கட்ட முயற்சி எடுக்கப்பட்டது. ஏனோ இன்

(3-ம் கலம் பார்க்க)

கண்கெட்டபின் சூரிய நமஸ்காரமா?

'சுந்தர'ருக்கு இராசசிங்கம் பதிலளிக்கிறார்

திரு. ஸி.சுந்தரலிங்கம் ஐயாவுக்கு;

தங்களின் 1977-03-25-ம் திகதிய பகிரங்கக்கடிதம் படித்தேன்.

உங்கள் கடிதம் பல பயனுள்ள விடயங்கள் பற்றிய தெளிவுகளை உருவாக்கியுள்ளது என்பதை ஏற்றுக்கொள்கின்றேன். இருந்தபோதிலும் தங்கள் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பல விடயங்கள் ஆட்சேபத்திற்குரியன.

ஆட்சேபகரமான விடயங்களைப்பற்றி குறிப்பிடுவதற்கு முன்னர் உங்களுடன் இந்த விவாத மேடையிலே பகிரங்கக் கடிதம் மூலம் கலந்துகொள்வதன் முக்கிய நோக்கங்களை முதலில் குறிப்பிடவேண்டியது எனது கடமை.

அவையாவன:

1. உங்களின் பழுத்த அரசியல் அனுபவங்களை இளைய தலைமுறையினரும் நாட்டு மக்களும் தெரிந்துகொள்ளும் சந்தர்ப்பத்தை உருவாக்குதல்.

2. உங்களின் அனுபவங்களை இளைய தலைமுறையினர் படிப்பினையாகக் கொண்டு தமது அரசியல் பாதையை செப்பனிட்டுக் கொள்ளுதல்.

3. பழைய அரசியல் விவகாரங்களை வெளிக்கொண்டு வருதல்.

எனவே எனக்கும் தங்களுக்கும் இடையில் நடைபெறும் இந்தப் பகிரங்கக் கடிதங்கள் அன்றைய அரசியல் ஈடுபாடுகளை அறியும் முயற்சி என்றும் இந்தக் கடிதங்கள் மூலம் பலர் அரசியல் விவகாரங்களைத் தெரிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படுகிறதென்றும் மனதில் கொள்ளவும். உங்கள் கடிதத்தில் நான் கிளப்பும் ஆட்சேபகரமான குறிப்புக்கள் பின்வருவனவாகும்:

1. பழைய அரசியல் சாசனத்தில்29-ம்ஷரத்தும் அதற்கு நீங்கள் வழங்கும் விளக்கமும்,

2. ஆலயப் பிரவேசம், சிறுபான்மைத் தமிழர் என்று அழைக்கப்படுகிறவர்கள், உங்களின் பங்கு,

3. திரு. டி. எஸ். சேனநாயக்கா, திரு. டட்லி சேனநாயக்கா ஆகியோர் காலத்தில் தமிழருக்கு எதிராக ஒன்றுமே நடைபெறவில்லை என்ற தங்களின் குறிப்பு.

ஐயா,

அரசியல் சாசனத்திலே சிறுபான்மை இனத்தவர்களுக்கும் பாதுகாப்பு அளிக்கும் நோக்கத்துடன்தான் 29-ம் ஷரத்து உருவாக்கப்பட்டது. சிறுபான்மை இனத்தவர்களைப் பாதிக்கும் எந்தவிதமான சட்டங்களும் கொண்டுவரப்படாமல் தடுக்கும் பாதுகாப்பளிக்கும் விதியாக அமையவேண்டும் என்ற நோக்கத்துடன்தான் தங்கள் போன்றவர்களின் பெருமுயற்சியால் உருவாக்கப்பட்ட ஷரத்து, எமது நாட்டின் மனித உரிமைச் சாசனத்தின் மறுபிறவி. அப்படித்தானே?

இந்த ஷரத்துப்பற்றி இன்னும் விளக்கமாகக் கூறுவதானால், பெரும்பான்மை சமூகத்தினரான சிங்களவர்கள், சிறுபான்மை இனத்தவர்களான தமிழர், தமிழ்பேசும் இனத்தவர்களை நசுக்காமல்அவர்களது உரிமைகளைப் பறிக்காமல் இந்த நாட்டிலே இரண்டாந்தரப் பிரசைகளாக ஆக்காமல் பாதுகாப்பளிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் உருவாக்கப்பட்ட ஷரத்தாகும்.

அரசியல் சாசனத்திலே, இந்த ஷரத்து உருவாக்கப்பட்டதன் நோக்கம் பவுத்தரமானது; பாராட்டத்தக்கது. ஆனால் அதன் நோக்கம்சீராக, சரியாகநிறைவேறவில்லை. காரணம் இது ஓர் வலுவற்ற ஷரத்தாகும். எனவேதான்–

1. பிரசாவுரிமைச் சட்டம் 1948.

2. இந்திய – பாகிஸ்தானிய வம்சாவழி (பிரசாவுரிமைச்) சட்டம் 1949

3. இலங்கை(பாராளுமன்ற) தேர்தல் சட்டம் 1949

4. உத்தியோக மொழிச் சட்டம் 1956

5. நீதிமன்ற மொழிச்சட்டம் 1960.

இந்த ஐந்து சட்டங்களும் நீங்களும் திரு. டி. எஸ். சேனநாயக்கா அவர்களும் சேர்ந்து உருவாக்கிய அரசியல் சாசனத்தின் கீழ்தான் உருவாக்கப்பட்டன. தமிழர்களுக்கு பாதுகாப்பு வழங்க என்று உங்களால் உருவாக்கப்பட்ட வலுவற்ற 59-ம் ஷரத்தினால் இந்த ஐந்து சட்டங்களும் உருவாகுவதை, அமுல்செய்வதை தடைசெய்யமுடியாமல் போய்விட்டது.

மேலே குறிப்பிடப்பட்ட முதல் மூன்று சட்டமும், தங்களின்முயற்சியினால்உழைப்பால் டி.எஸ். சேனநாயக்கா பிரதமராகஇருந்த காலத்தில் உருவாகிய சட்டங்களாகும். இத்த நாட்டிலே வாழ்ந்த மலைநாட்டு இந்தியவம்சாவழியினரின் குடியுரிமையையும் வாக்குரிமையையும்பறிக்கும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்டவை. மற்றையஇரு சட்டங்களும் அமரர் திரு எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா,திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா ஆகியோர் பிரதமர்களாக இருந்த காலத்தில்மொழி உரிமை, சொந்த மொழியில் தமிழர் நீதிகோரும் உரிமைகளை மறுக்கும் சட்டங்களாகும்.

விவாதமேடை

இத்தகைய வலுவற்ற ஷரத்து, தமிழினத்தின்பெரும்பான்மைச் சாதியினரின்வணங்கும் உரிமையை ஆலயத்துக்குள் சிறுபான்மைத்தமிழ் மக்கள் என்று அழைக்கப்படுபவர் சென்று வழிபட சட்ட பாதுகாப்பு வழங்க திரு. க. கனகரத்தினம் கமிஷனின் சிபார்சுக்கு அமையஉருவாக்கப்பட்ட சட்டத்தை தடுத்து நிறுத்த உதவியது என்று குறிப்பிட்டுள்ளீர்கள் பிற்போக்குக் கும்பலின் சுயநல முயற்சிக்கு பாதுகாப்பு வழங்கிய இந்த ஷரத்தையும், அது அடங்கிய அரசியல் சாசனத்தையும் நான் பலமுறை பகிரங்கமாகக் கண்டிக்கத்தயாராக இருக்கின்றேன் என்பதை தங்களுக்கு அறியத்தருகின்றேன்.

இரண்டாவது ஆட்சேபகரமான விடயம்

சிறுபான்மைத் தமிழ் மக்கள் என்று அழைக்கப்படுபவர்கள் சில வருடங்களுக்குமுன் சைவக் கோவில்களுக்குள்ளும், வேதக் கோயில்களுக்குள்ளும், சுவாமி தரிசனம் செய்ய முயன்றபோது மிளகாய்த்தூளாலும், கற்களாலும், கொட்டன்களாலும் துரத்தப்பட்டுள்ளார்கள் என்று குறிப்பிட்டுள்ளீர்கள்.

இந்த வசனங்களைப் படிக்கும்போது இரத்தக்கண்ணீர் வடிக்கின்றேன்.

ஒருபகுதி தமிழ் இனம் தமக்கு வழங்க மறுக்கப்பட்ட உரிமையை, சமூக நீதியை பெறும் நோக்குடன் எழுச்சி பெற்று உரிமைப்போராட்டம் நடாத்த முன்வந்தபோது, பிற்போக்குச் சக்திகளால் தடுத்து நிறுத்தப்பட்டதை பெருமையோடு வர்ணித்துள்ளீர்கள்.

இதுவே தமிழினத்தின்கறைபடிந்த வரலாற்றுக் காலகட்டமாகும்.

மனிதஉரிமைகள்நசுக்கப்பட்டுள்ளது. சமூகநீதி மறுக்கப்பட்டுள்ளது. இதையிட்டுப் பெருமைப்படும் கைகளையும், தங்கள் செய்கைகளையும் எவருமே ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

முன்னைநாள் இந்தியப்பிரதமர் திருமதி இந்திரா காந்தி, மக்களின் உணர்ச்சிகளை மதிக்கத்தவறினார். அவசர காலநிலையைப் பிரகடனப்படுத்தினார்: அலகபாத்து நீதிமன்றம் அவரது தேர்தல் செல்லுபடியாகாது என்று தீர்ப்பு வழங்க அந்தத் தீர்ப்பை மதிக்கத் தவறினார். அவசரகால நிலையைப் பிரகடனப் படுத்தினார். அரசியல் சட்டத்தில் திருத்தம் கொண்டுவந்து தனது தேர்தல் செல்லுபடியாகும் என்ற தீர்ப்பைப் பெற்றார். சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்ட தியாகிகளைமறியலுக்குள் தள்ளி அடைத்து துன்புறுத்தினார். கட்டாயமாக மலட்டுத் தன்மையை ஆண், பெண் இருபாலாருக்கும் உருவாக்கினார்.

இவைகள் மக்கள் மனதில் திருமதி காந்திக்கு எதிராக வெறுப்பை வளர்த்தன. மக்கள் தீர்ப்பு அளிக்கும் நாள் வந்தது. 30 வருடமாக ஆட்சி நடாத்தி வந்த காங்கிரசை தூக்கி எறிந்தனர். 62-ல் பரேலி தொகுதியில் போட்டியிட்ட இந்திராகாந்தி அத்தொகுதியின் பிரதிநிதியாக இருக்கத்தகுதியற்றவர் என்றும் தீர்ப்பு வழங்கினர். இதன் மூலம் சர்வாதிகாரத்துக்கு முற்றுப்புள்ளி வைத்தனர்.

இதே போல சிறுபான்மைத் தமிழ் இனத்தவர்கள் என்று அழைக்கப்படுகின்றவர்களுக்கு எதிராக நீங்கள் எடுத்த நடவடிக்கைகள் சர்வாதிகாரமானது. மக்கள் தீர்ப்பு என்றுமே தங்களுக்கு எதிராகவே இருக்குமென்று அஞ்சுகின்றேன்.

மூன்றாவது ஆட்சேபம்

திரு. டி. எஸ். சேனநாயக்கா, திரு. டட்லி சேனநாயக்கா காலத்தில் தமிழர்களுக்கு மாறாக எதுவும் நடக்கவில்லையென்று குறிப்பிட்டுள்ளீர்கள். இது முழுப் பூசினிக்காயை இலைச்சோற்றுக்குள் மறைக்கும் முயற்சியாகும்.

திரு. டி. எஸ்.சேனநாயக்காவின் காலத்தில்தான் பின்வரும் விடயங்கள் நடைபெற்றன.

1. சுமார் 15 லட்சம் இந்திய வம்சாவழியினர்பிரசாவுரிமை இழக்கும் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

2. இந்திய வம்சாவழியினர் வாக்குரிமைஇழக்கும் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

3. கல்லோயா பிரதேசம் சிங்கள மயமாக்கப்பட்டது. (கேற்முதலியார் காரியப்பர் சம்மதம் வழங்கியிருக்கலாம். அதன் பலனாக இப்பகுதியில் சிங்களக்குடியேற்றம் நடைபெற்று இருக்கலாம். தமிழ் பிரதேசம் ஒன்றை சிங்கள மயமாக்க கேற்முதலியார் காரியப்பருக்கு சம்மதம் வழங்க எந்த அதிகாரமும் கிடையாது.)

4. தேசியக்கொடியில் தமிழ்மக்களின் அபிலாசை மறுக்கப்பட்டது.

5. இந்தநாட்டிலே சிங்கள ஏகாதிபத்தியத்துக்கு வித்திடப்பட்டது.

எல்லாவற்றுக்கும் மேலாக, சிகரம் வைத்ததுபோல 1948ம் ஆண்டிலே பிரிட்டிஷாரின் பிடியிலிருந்து நாடு சுதந்திரம் அடையும்போது, உங்களைப் போன்ற தமிழ்த்தலைவர்களின் எண்ணங்களையும் கருத்துக்களையும், முடிவுகளையும் தன்வயப்படுத்தி, திசைதிருப்பி தமிழ் ஒராட்சியம் ஒன்று அமையவிடாமல்ஒற்றைஆட்சி அமைப்புமுறை கொண்ட பூரணஇலங்கையையும்சிங்கள ஏகாதிபத்தியத்துக்குக் கீழ் கொண்டு வந்ததும் திரு. டி. எஸ். சேனநாயக்காவே.

திரு டட்லி சேனநாயக்காவின் ஆட்சிக்காலத்தில் தான்

1. திருகோணமலையை சிங்களமயமாக்கும் உள்நோக்கத்துடன் இத்துறைமுகம் தேசியமயமாக்கப்பட்டது.

2. திருக்கோணேஸ்வரத்தை தமிழ்மக்களின் அபிலாசைகளுக்கு ஏற்ப புனித நகராகப் பிரகடனம் செய்யாமல் மறுப்பு வழங்கப்பட்டது.

3. கதிர்காமக் கந்சுவின் ஆலயத்திலுள்ள சைவஅடியார்கள் கட்டி ஆண்டாண்டு காலமாக இருந்த மடங்கள் யாவும் இடித்து தரைமட்டமாக்கி சிங்களமயமாக்கப்பட்டது.

4. தமிழ்ப்பகுதியில் பல்கலைக்கழகம் அமைவதை தட்டிக் கழித்தது.

இவ்வாறு அடுக்கிக் கொண்டே போகலாம்

"நான் சிங்களத்தலைவர்களை நம்பிக் கெட்டுப்போனேன் என்று பலமுறை பகிரங்கப் படுத்தியுள்ளேன். என் பகிரங்க சீவியத்தில் இதுதான் ஒரேஒருபிழை என்று குறிப்பிட்டுள்ளீர்கள்.

பலமுறை பகிரங்கமாக இந்தப் பிழையைஏற்றுக்கொண்ட உங்கள் பெருந்தன்மைக்கு எனது பாராட்டுக்கள் உங்கள் இந்தப் பிழை தமிழினத்தின் வரலாற்றையே திசைதிருப்பி விட்டது பார்த்தீர்களா?

ஐயா, நீங்களும் ஏனைய எமது தலைவர்களைப்போல சம்பவங்களை நிகழவிட்டு பின்னர் அதனால் இழுபடுபவராகவே இருக்கின்றீர்கள். சிங்கள அரசியல் தலைவர்களை நம்பி ஏமாற்றம்அடைந்தபின்னர், இன்று தமிழ்இனம் இவ் இழிநிலைக்குத் தள்ளப்பட்டபின்னர், பரிகாரம்காணமுயல்கின்றீர்கள். கண்கெட்ட பின்னர் சூரிய நமஸ்காரம் என்பார்களே, அதுமாதிரி.

இன்றைய இளையதலைமுறைக்கு செயற்படும் தலைவர்கள்தான் வேண்டும் என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். செயற்படும் தலைமை இனத்துக்கு எதிரான நிகழ்ச்சிகளை அரசாங்கம் செய்தபின்னர், அதனால் இழுபட்டு எதிர்ப்பு இயக்கங்கள், பொது மக்கள் அபிப்பிராயங்களைத் திரட்டுதல்போன்ற, இன்னோரன்ன பணிகளில் தமிழ்இளைஞர்களின் போராடும்சக்திகளை விரயமாக்கும், மாதிரிஅமையக் கூடாது.

திட்டம் தீட்டி இனத்தை விமோசனப்பாதைக்கு இட்டுச் செல்லும் தீர்க்கதரிசனமும் செயல்திறனும் கொண்டதாக தலைமை அமையவேண்டும்.

இத்தகைய தலைமையைத்தான் இளையதலைமுறையினர் அவாவுகின்றனர், நாடுகின்றனர்.

இந்தமாதிரியான தலைமையை உருவாக்குவதில் உங்களின் 'அறிவும் ஆற்றலும், தீரமும், ஞானமும் பயன்படட்டும். இதுவே நீங்கள் தமிழ்இனத்துக்குச் செய்யும் பிராயச்சித்தமாகும்.

"சட்டத்தையும், ஒழுங்கையும் மாணவர் மதிக்கவேண்டும்"

பிரதமர் வேண்டுகோள்

கொழும்பு,வியாழன்

"சிறந்த பிரஜைகளை உருவாக்குவதில் இருந்தே ஒரு கல்லூரியின் தரத்தைக் கணிக்க முடியும்" என்று பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா கொழும்பில் நடைபெற்றவைபவம் ஒன்றில் பேசுகையில் கூறினார்.

கொழும்பு விஸாகா வித்தியாலயத்தின் புதிய கட்டிடம் ஒன்றிற்கான அடிக்கல்லை நாட்டி வைத்துப் பேசுகையில் பிரதமர் மேலும் கூறியதாவது: "கல்வித்துறை வளர்ச்சிக்கு அரசாங்கம் வரவு-செலவுத் திட்டம் மூலம் பெருந்தொகையான பணத்தை ஒதுக்கியுள்ளது.

சிறந்த பிரஜைகளை உருவாக்குவதே ஒரு கல்லூரியின் நோக்கமாக இருக்கவேண்டும். கட்டடங்களை அதிகரிப்பதாலோ, மாணவர் தொகையைஅதிகரிப்பதாலோ கல்லூரி வளர்ச்சியடைந்துவிட முடியாது.

சிறந்த பிரஜைகளை உருவாக்குவதில் இருந்தே ஒரு கல்லூரியின் தரத்தைக் கணிக்க முடியும். சட்டத்தையும் ஒழுங்கையும் மதித்து நடக்கும் நற்பிரஜைகளை கல்லூரிகள் உருவாக்கவேண்டும். நற்பிரஜைகள் உருவாக்கப்பட்டாலே நாடு சிறப்படையும்.

சட்டத்தை மீறும்மாணவர் இலங்கையில் மட்டுமா?

சட்டத்தை மீறும் மாணவர்கள் இலங்கையில் மட்டுமல்ல ஏனைய நாடுகளிலும் இருக்கிறார்கள்.

பேராதனை வளாகத்தில் அண்மையில் ஏற்பட்ட அசம்பாவிதங்களுக்கு மாணவர்களை சில பிரிவினர் தவறான வழியில் தூண்டியதே காரணமாகும். கல்லூரிகள் தம்கௌரவத்தை நிலைநாட்டுவதில் கவனம் செலுத்த வேண்டும். பாடப்புத்தகங்களைப் படித்து பரீட்சையில் மாணவர்கள் சித்தியடைந்துவிட்டால் மட்டும் போதாது.

மாணவர்கள் சட்டத்தையும் ஒழுங்கையும் மதித்து நடக்கப் பழகிக் கொள்ள வேண்டும்." (உ)

இனறு வணிகமன்ற வணிகவிழா

யாழ்ப்பாணம்,வெள்ளி

யாழ். பல்தொழில் நுட்ப நிறுவனத்தின் வணிக மாணவ மன்றம் நடாத்தும் வணிக விழா இன்று பிற்பகல் மேற்படி நிறுவனத்தில் நடைபெற விருக்கிறது.

கல்லூரி அதிபர் திரு. சீ. டா. ஜெயசிங்கம் கல்லூரிக் கொடியேற்றி வைப்பார்.

யாழ் வளாக மனிதப் பண்பியற் பீடத்தலைவர் பேராசிரியர் கா. கைலாசநாதக்குருக்கள் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். திரு. ஜே. பி. பாக்கியராசா தலைமையுரை நிகழ்த்துவார். பத்திராதிபர் செல்வி எஸ். மாலதி வணிகமலரை வெளியிட்டு வைத்து அறிமுகம்செய்வார்.

யாழ்ப்பாணம் 'தேவன்' மலர் விமர்சனம் செய்வார்.

திருவாளர்கள் எஸ். ராஜேந்திரா, கலாநிதி அ. சண்முகதாஸ், க. ஜெயரத்தினம், சி. சிவராமலிங்கம், வே. இ. பாக்கியநாதன் ஆகியோர் உரையாற்றுவர். திருமதி ஜெயசிங்கம் பரிசில் வழங்குவார்.

சிறப்பு நிகழ்ச்சியாக மாணவரின் ஹாஸ்ய நாடகம் இடம் பெறும். (உ)

சீன –

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

சாங்கமும் கைக்கொள்ளும். சீனாவுடன் பாரதம் உறவை மேலும் வளர்த்துக்கொள்ள முடியும் என்ற நம்பிக்கை எமக்குண்டு. சகல நாடுகளுடனும் நட்புறவுடன் நடந்து கொள்ளவே பாரதம் விரும்புகிறது.

அணிசேராக் கொள்கையை பதிய சாங்கமும் செயற்படுத்தும். ஆனால் நடைமுறைப்படுத்தும் விதத்தில் சில வித்தியாசங்கள் ஏற்படலாம்.

ஜனதாவின் தேசிய மகாநாடு இன்று

இதேவேளை ஜனதா கட்சியில் அங்கம்வகிக்கும் கட்சிகளினது தேசியமாநாடு இன்று புதுடில்லியில் நடைபெறவிருக்கிறது.

இத்தகவலை பிரதமரும், ஜனதா கட்சித் தலைவருமான திரு. மொரார்ஜி தேசாய் வெளியிட்டார். (உ)

"சிறந்த பிரஜைகளை உருவாக்குவது தாய்மாரின் கடமை"

யாழ்ப்பாணம், வெள்ளி

''லயன்ஸ் கழகமும், ரோட்டரிக்கழகமும், அவைகளோடு இணைந்த மாதர் கழகமும் பின்தங்கிய கிராமங்களின் அபிவிருத்திக்காகத் தம்மாலான சேவைகளை ஆற்றி வருவதைப் பாராட்டாமலிருக்க முடியாது. இப்பகுதியில் வாழும் வறிய பிள்ளைகளுக்காக நடாத்தப்படும் இப்பாலர்பாடசாலையின் வளர்ச்சிக்காக ரோட்டரி மாதர் கழகம் செய்துவரும் சேவை பாராட்டத்தக்கதாகும். சிறுவர்களைச் சிந்திக்கச் செய்யவும் செயலாற்றத் தூண்டவுமே இப்பாலர் பாடசாலை சேவை செய்து வரவேண்டும். இங்கு கல்வி கற்கப்படும் சிறார்களின் எதிர்காலம் சிறப்பாக அமைய அவர்களை நாட்டின் நல்ல பிரசைகளாக்க ஒழுக்கமுள்ளவர்களாக்க சிறந்த முறையில் கல்வி போதிக்கப்படவேண்டும்.''

இவ்வாறு அரியாலை காந்தி சனசமூகநிலையத்தின் ஆதரவில் வெள்ளிவிழா அரங்கில் இதுவரை நடைபெற்றுவந்த பாலர் பாடசாலைக்கென புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மண்டபத்தில் நடைபெற்ற ''பால் பொங்கல்'' விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட தொழிலதிபரும், திருக்குறட்காவலருமான திரு. க. கனகராசா பேசுகையில் குறிப்பிட்டார்.

நிலையத்தலைவர் திரு. எஸ். பி. ஜீவானந்தம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் ரோட்டரி மாதர்கழகத் தலைவி திருமதி பொ. சண்முகலிங்கம் பேசுகையில் கூறியதாவது:

''எதிர்காலச்சந்ததியினர் சிறந்த பிரசைகளாக இருக்க வேண்டுமானால் அவர்கள் சிறு வயதிலேயே சிறந்த முறையில் பேணப்பட்டு அறிவு புகட்டப்படவேண்டும். அவர்கள் ஒழுக்கமுள்ளவர்களாக வாழ வேண்டுமானால் அவர்களுக்கு ஆரம்ப பருவத்திலேயிருந்து சிறந்த ஒழுக்கம், பழக்கமுறைகள் போதிக்கப்படவேண்டும். பிள்ளைகளைப் பெற்றுவிடுவது மட்டும் தாய்மாரின் கடமையல்ல. பெற்ற பிள்ளைகளை நன்றாகப் பேணி பாதுகாத்து அவர்களுக்கு நல்ல உணர்வுகளையூட்டி வளர்ப்பதுடன் அவர்களை நாட்டின் சிறந்த பிரசைகளாக்கவேண்டியதும் அவர்களது கடமைகளாகும். இப்பகுதியில் வாழும் வறிய பிள்ளைகளின் எதிர்காலம் சிறக்க காந்தி சனசமூக நிலைய நிர்வாகிகள் எடுத்துவரும் சகல முயற்சிகளும் பாராட்டுக்குரியனவாகும். இப்பாலபாடசாலையின் வளர்ச்சிக்கு வேண்டிய உதவிகளைச் செய்துதர ரோட்டரி மாதர்கழகம் முயற்சி செய்யும்.''

ரோட்டரி மாதர் கழகத்தின் சார்பில் மேற்படி விழாவில் கலந்துகொண்ட திருமதிகள் மகேந்திரன், அரசரத்தினம், சுந்தரலிங்கம், சேனாதிராசா, கிர்த்திசிங்கம் ஆகியோர் பாலர்பாடசாலைக்கு வேண்டிய படிப்பித்தல் உபகரணங்களையும், விளையாட்டுச் சாமான்களையும் நிலையத் தலைவரிடம் கையளித்தனர். (அ)

நோயின்கொடுமை: வயோதிபர்தற்கொலை

மாவிட்டபுரம், வியா

நோயின் கொடுமையைத் தாங்கமுடியாது அவஸ்தைப்பட்ட வயோதிபர் ஒருவர் சுருக்கிட்டுத்தற்கொலை செய்துகொண்டார்.

அச்சுவேலியைச்சேர்ந்த கந்தர் கந்தையா (65வயது)என்பவரே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டவராவார்.

இவரது மரணம் குறித்து திடீர்மரணவிசாரணை அதிகாரி திரு. உலகநாதன் விசாரணை நடத்திய சமயம், தீராதநோய் காரணமாக மனமுடைந்து காணப்பட்ட காலமானவர், எவரும் வீட்டிலில்லாத சமயம் வீட்டுவிறுந்தையில் சுருக்கிட்டுத்தற்கொலை செய்துகொண்டதாகச் சாட்சியங்கள் தெரிவித்தன. தற்கொலை எனத் தீர்ப்புவழங்கப்பட்டது.

காங்கேசன்துறைப் பொலிசைச்சேர்ந்த குஞ்சுபண்டார், பதார்தீன் ஆகியோர் விசாரணைக்கான ஏற்பாட்டைச் செய்திருந்தனர்.

"எமது தொண்டர்கள் தாக்கப் படுகிறார்கள்"

பொலிசிடம் எம். ஜி. ஆர். புகார்

(நமது நிருபர் சாந்தன்)

சென்னை, மார்ச் 31

தேர்தலுக்குப் பின்னால் தமிழகம் முழுவதும் அனைத்திந்திய அண்ணா தி. மு. கழக தொண்டர்கள் தாக்கப்படுகிறார்கள் என்று எம். ஜி. ஆர். சார்பில் ஐ. ஜி.யிடம் கே. ஏ. கிருஷ்ணசாமி புகார் தெரிவித்தார்.

அனைத்திந்திய அண்ணா தி. மு. கழக அமைப்புச் செயலாளர் கே. ஏ. கிருஷ்ணசாமியும், வழக்கறிஞர் பொன்னையனும் தமிழக காவல்துறை ஐ. ஜி. ஸ்டிரேசியைச் சந்தித்து இது பற்றிப் புகார் செய்துள்ளார்கள்.

நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் படுதோல்வியடைந்த தி. மு. க.வினர் ஆத்திரமடைந்து தமிழகம் முழுவதும் அனைத்திந்திய அண்ணா தி. மு. க. வினரைத் தாக்கிவருவதாக நாள்தோறும் தலைமை அலுவலகத்திற்குப் புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன. இந்த வன்முறைச் செயல்களைத் தடுத்து நிறுத்தி அனைத்திந்திய அண்ணா தி. மு. கழகத் தொண்டர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவேண்டுமென்று அவர்கள் ஐ. ஜி. யிடம் கேட்டுக் கொண்டார்கள்.

புகைப்படங்கள்

தாக்குதலுக்கு ஆளான தொண்டர்களின் புகைப்படங்களையும் வேறு சில ஆதாரங்களையும் ஐ. ஜி. யிடம் அவர்கள் அளித்தார்கள்.

குறிப்பாக சென்னை நகரில் சிலவட்டாரங்களில் தி. மு. க. வினர் நடத்திய வன்முறைச் செயல்கள் குறித்தும் ஸ்டிரேசியிடம் கே. ஏ. கிருஷ்ணசாமியும், பொன்னையனும் விளக்கிக் கூறினார்கள்.

தமிழகத்தில் ஆங்காங்கே நடைபெற்ற வன்முறைச் செயல்கள் குறித்து பொலிஸ் தலைமை அலுவலகத்திற்கும் தகவல்கள் வந்திருக்கின்றன. இந்த வன்முறைகள் அடக்கப்படும். வன்முறையாளர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அனைத்திந்திய அண்ணா தி. மு. கழக தலைவர்களிடம் ஐ. ஜி. ஸ்டிரேசிஉறுதி கூறினார்.

"விஞ்ஞான அடிப்படையில் சுதேச வைத்தியம் அபிவிருத்தி செய்யப்படும்"

கொழும்பு, வியா

''சுதேச வைத்தியத்துறை விஞ்ஞான அடிப்படையில்அபிவிருத்தி செய்யப்படவிருக்கிறது'' என்று பிரதி சுகாதார அமைச்சர் திரு. ராஜா வெலே கம யக்கலயில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசுகையில் கூறினார்.

யக்கல சித்தஆயுர்வேதக்கல்லூரியில் நடைபெற்ற இவ்வைபவத்தில் பிரதியமைச்சர் மேலும் பேசுகையில், ''எமது பாரம்பரிய வைத்தியத்துறை அபிவிருத்தி செய்யப்படுவதன் மூலம் நாடு பெரும் பயனடையும். எமது நாட்டின் சதேச வைத்தியமுறைகளை பலவெளி நாடுகளும்பாராட்டியுள்ளன'' என்றார். (உ)

யார் இவர்?

கொழும்பு, வியா

புலி,பாம்பு, கிரிஸ் கத்தி செவ்விந்தியர் ஒருவரின் தலைச் சின்னம் முதலான பச்சைகளைத் தமது உடலில் குத்தியுள்ள இனம்தெரியாத நபர் ஒருவரின் சடலம் கொள்ளுப்பிட்டி பஸ்தரிப்பு நிலையம் ஒன்றருகில் கிடக்கக்காணப்பட்டது.

• சிவந்த நிறமுள்ள திடகாத்திரமான உடலமைப்புக் கொண்ட இவருக்கு சுமார் 55 வயதிருக்கலாம் எனக் கருதப்படுகிறது. வெள்ளைச் சாரமும், சேட்டும் அணிந்து காணப்படும் இவரது உறவினர்களைத் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு கொள்ளுப்பிட்டிப் பொலிசார் அறிவித்துள்ளனர். (உ)

பாடசாலைகளில்

இசை, நடன, நாடகக் கலைகள் போதிக்கப்படும்

கல்வி அமைச்சு ஏற்பாடு

கொழும்பு, வியா

தெரிவு செய்யப்பட்ட ஐம்பது பாடசாலைகளில் எதிர்வரும் ஜூன் மாதம் தொடக்கம் இசை, நடன, நாடகக் கலைகள் பட்டதாரி ஆசிரியர்கள் மூலம் கல்வியமைச்சு போதிக்கவிருக்கிறது.

பத்தாம், பதினாறாம் வகுப்புகளில் இப்பாடங்கள்போதிக்கப்படும்.

இதன் பொருட்டு கிராமப்புறங்களிலும் பட்டணப்புறங்களிலும் இருந்து ஐம்பது பாடசாலைகள் கல்வியமைச்சினால் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றன. (உ)

இன்று முகவீணைக்கச்சேரியில் பிரகலாதன் மிருதங்கம்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ். நுண்கலை மன்றம் இன்று ஒருவிசேடஇசைநிகழ்ச்சியை ஒழுங்கு செய்துள்ளது. சென்னை வானொலி நிலைய மிருதங்க வித்துவான் திரு. பிரகலாதன் இரத்தினதுரையின் மிருதங்கஇசைவிருந்தை யாழ். மக்கள் அனுபவிக்கும் நோக்கமாக இந்நிகழ்ச்சி ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

திரு. பிரகலாதன் இரத்தினதுரை திரு. பி. எஸ். ஆறுமுகம் பிள்ளையின் முகவீணைக்கச்சேரிக்கு மிருதங்கம்வாசிப்பார். இன்று மாலை யாழ். ட்றிம்மர் மண்டபத்தில் இக்கச்சேரி இடம்பெறும். செல்வி தனதேவி சுப்பையா வயலினும், திரு. கே. கணேசன் தவிலும், திரு. பி. சுப்புசாமி கடமும், திரு. என். ஆர். புண்ணியமூர்த்தி கஞ்சிராவும்வாசிப்பர்

விடுமுறையில் யாழ்ப்பாணம் வந்துள்ள திரு. பிரகலாதன் இரத்தினதுரை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவராவர். தற்போது சென்னைவானொலிநிலையத்தில் பணியாற்றுகிறார். அகில இந்திய வானொலி நடத்திய மிருதங்க இசைப்போட்டியில் திரு. பிரகலாதன் முதலிடத்தைப்பெற்றுத் தங்கப்பதக்கம் பரிசுபெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

—

விசேஷ பூசை

பண்டத்தரிப்பு, வியா

பண்டத்தரிப்புத்தமிழ் இளைஞர் பேரவைக் கிளையினரால் வடலியடைப்பு புருதனை சித்திவிநாயகர் ஆலயத்தில் முதறிஞரின் சுகம்வேண்டி விசேஷ பூசை நடாத்தப்பட்டது பண்டத்தரிப்புப்பகுதித்தமிழ் இளைஞர் பேரவை அமைப்பாளர் திரு. பொ. கனகசுலசிங்கம் தலைமையில் பெருந்தொகையான தமிழ்இளைஞர்களும் மற்றும் நூற்றுக்கணக்கான பொதுமக்களும் இவ்விசேஷ பூசையில் கலந்துகொண்டனர். (அ)

.....

கமத்தொழில் உத்தியோகத்தர் சங்கம்

யாழ்ப்பாணம், வெள்ளி

வடபகுதி கமத்தொழில் விளைவுப் பெருக்கக்குழு உத்தியோகத்தர்கள் சங்கப்பொதுக் கூட்டம்நல்லூர் கமத்தொழில் சேவை நிலையத்தில் இன்று ஞாயிறு காலை நடைபெறவுள்ளது. பிரதம விருந்தினராகப் பிரதி காணி விவசாய அமைச்சு உதவிப் பணிப்பாளர் திரு. ஜே. செந்தில்நாதன் கலந்துகொள்கிறார்.

எச். என். ஸி. ஈ. ஆரம்பிக்கக் கோரிக்கை

சங்கானை, வியா

சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் உடனடியாக எச். என். ஸி. ஈ. வகுப்பை ஆரம்பித்து இப்பகுதி மாணவர்களின் குறையைத்தீர்த்து வைக்க ஆவன செய்யுமாறு சங்கானைப் பட்டினசபை தீர்மானம் ஒன்றை ஏகமனதாக நிறைவேற்றி யாழ். மாவட்ட கல்விஅத்தியட்சகருக்குக் அனுப்பிவைத்துள்ளது. (அ)

கட்டப்பிராய் ச. ச. நிலைய ஆண்டு விழா

கல்வியங்காடு வியா

கட்டப்பிராய் கலைமணி சனசமூகநிலையத்தின் 28 வது ஆண்டுநிறைவுவிழாவையொட்டிய இல்லங்களுக்கு இடையிலான விளையாட்டுப்போட்டி ஏப்ரல் மாதம் 11, ம் 12ம்திகதிகளில் நிலைய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

நிலைய இல்லங்களான கென்னடி, லிங்கன், வில்ஸன்ஆகியவற்றிற்கிடையே இப்போட்டிகள்இடம் பெறும்.

இவ்விழாவை முன்னிட்டு நடைபெறும் பேச்சுப் போட்டி ஏப்ரல் 9 ம்திகதி நிலையக்கட்டிடத்தில் இடம்பெறும். பரிசு பெறுபவர்களுக்குரிய பரிசுகள் ஆண்டு விழாவன்று வழங்கப்படும். (உ)

ரதோற்சவம்

யாழ்ப்பாணம், வெள்ளி

நல்லூர் சட்டநாதர் சிவன் கோவில்தேர்த்திருவிழா நாளை சனிக்கிழமைநடைபெறுகிறது. ஞாயிறன்று தீர்த்த உற்சவம் நிகழும். (அ)

யாழ்.-பரு.-கிளிநொச்சி

லீக்குகள் போட்டி இன்று முதல் ஆரம்பம்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாண உதைபந்தாட்டச் சங்கத்தினால், யாழ்ப்பாண உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் விளையாட்டுக் கழகங்களிடையேமுதன் முறையாக நடாத்தப்படும், 'நொக்கவுட்' உதைபந்தாட்டப் போட்டி இன்று, கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலை மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

இந்த நொக்கவுட் போட்டியில் குருநகர் பாடும்மீன், பாஷையூர் சென். அன்ரனிஸ், கிறீன்பீல்ட், நாவாந்துறை சென். மேரிஸ், புனிதவளன், சம்சன், சன்றைஸ், பொற்பதி, யுத்தாமல், அரியாலை ஆகிய விளையாட்டுக் கழகங்கள் கலந்து கொள்கின்றன.

இன்று நடைபெறும் போட்டியில் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சம்சன் விளையாட்டுக் கழகம் மோதும். நாளையப் போட்டியில் யுத்தாமல் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சன்றைஸ் விளையாட்டுக் கழகம் மோதும். இம்மாதம் 9-ம் திகதி நடைபெறும் போட்டியில், யாழ்ப்பாணம் கிறீன்பீல்ட் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து குருநகர் புனிதவளன் விளையாட்டுக் கழகமும், 10-ம் திகதிப் போட்டியில் கொக்குவில் பொற்பதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அரியாலை ஐக்கியவிளையாட்டுக் கழகமும் மோதுகின்றன.

இப்போட்டிக்கான சகல ஏற்பாடுகளையும், யாழ்ப்பாண உதைபந்தாட்டச் சங்கக் காரியதரிசி திரு. ஈ.கே. குமரையா மேற்கொண்டுள்ளார்.

சிறந்த முறையில் தற்போது அமைந்திருக்கும் கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலை விளையாட்டு மைதானத்தில் இது போன்ற உதைபந்தாட்டப் போட்டிகள் நடைபெறுவது இதுவே முதற் தடவையாகும்.

மேற்படிச் சங்கத்தின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வரும் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக், கிளிநொச்சி உதைபந்தாட்ட லீக் ஆகிய எற்றில் அங்கம் வகிக்கும் விளையாட்டுக் கழகங்களிடையேயும் இதுபோன்ற நொக்கவுட் உதைபந்தாட்டப் போட்டிகள் இன்று ஆரம்பமாகின்றன.

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் போட்டிகள் யாவும் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்திலும், கிளிநொச்சி உதைபந்தாட்ட லீக்கின் போட்டிகள் யாவும் கிளிநொச்சி ரெட்றிக்கோ மைதானத்திலும் நடைபெறுகின்றன. (அ)

வெஸ்லி
[மானிப்பாய்]
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
எம்.ஜி.ஆர்-ஜெயலலிதா
அன்னமிட்டகை

நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினரிசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
ரவிச்சந்திரன், பாரதி
தங்கத் தம்பி

ஸ்ரீதர் ஃ சிவாஜி (இருவேடம்)
(யாழ்ப்பாணம்) ஃ ஜெயலலிதா ஃ சுந்தரராஜன்
தினசரி 4 காட்சிகள் நடித்த
பாட்டும் பரதமும்
(ஈஸ்ட்மன் கலர்)

REGAL Daily at 4-45 7-00 & 9-30 P. M.
(JAFFNA)
Steptoe & Son
Ride Again
(Color)

ராஜா சிவாஜி - முத்துராமன்
[யாழ். நகர்] சௌகார் ஜானகி - விஜயகுமாரி
தினசரி 4 காட்சிகள் நடித்த
பார் மகளே பார்

9 வது வெற்றி வாரம்!
மனோகரா எம்.ஜி.ஆர் - ராதாசலூஜா
வீரப்பா - நிர்மலா
(யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள் நடித்த
இதயக்கனி
(ஈஸ்ட்மன்கலர்)

வின்ஸர் ஆனந்தன், குமாரி சச்சு
ஈ. வி. சரோஜா, அசோகன்
(யாழ். நகர்) நடித்த
தினசரி 4 காட்சிகள்
வீரத் திருமகன்
(புத்தம் புதிய பிரதி)

ராணி தினசரி 4 காட்சிகள்
ஜெமினிகணேசன்
[யாழ்நகர்] நடித்த
பாக்கியலட்சுமி

வெலிங்டன் ஃ முத்துராமன் ஃ சுஜாதா
[யாழ். நகர்] நடித்த
தினசரி 4 காட்சிகள்
வாழ்ந்து காட்டுகிறேன்

லிடோ போன்: 7693 சிவாஜி,கே. ஆர்.விஜயா
[யாழ். நகர்] பத்மினி நடித்த
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45.
இருமலர்கள்

றியோ தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்)
அலெக்சாண்டர் டியூமாஸின் பிரபலயமிக்க நாவல்
இப்பொழுது
எப்போதும் தயாரிக்கப்படாத அளவுக்குப்
பிரமாண்டமாகத் தயாரிக்கப்பட்டுள்ள படம்
THE COUNT OF MONTE-CRISTO
சூழ்ச்சியாலும் சதியாலும்
காட்டிக்கொடுக்கப்பட்டுச் சிறையிலிடப்பட்டு
உயிரோடு அடைக்கப்பட்டிருந்த
நிரபராதி ஒருவனின் கதை.
ஆனால் அவன் இறந்துவிட்டதாக உலகத்துக்கு
அறிவிக்கப்பட்டது.
டான்டே சாதாரண மனிதன் அல்ல!
பழிக்குப் பழிவாங்க அவனுக்கு 23 ஆண்டுகள்
பிடித்தன. பழிக்குப் பழிவாங்கியே தீருகிறான்.
வரலாறிலேயே தீரம் மிக்க செயல்.

பள்ளிக்கூடங்களுக்கு விசேஷ பிற்பகல்
1-30 காட்சி
(முன்னேற்பாடு செய்தல்வேண்டும்)
எல்லா வகுப்புகளுக்கும் ஒரே கட்டணமாக ரூ. 1-50
முகாமையாளருடன் தொடர்புகொள்க.
(ஒருசில நாட்களுக்கு மட்டும்)

'நாடில்லாத இனம் நடுக் கடலில்தான் விழவேண்டும்'

புத்தளத்தில் அந்தனிசில் உரை

புத்தளம், வியா

"இன்று வீடில்லாத ஒருவன் வீதியிலே நிற்பான். ஆனால் நாடில்லாத இனம் நடுக் கடலில்தான் விழவேண்டும். எந்தவொரு இனமும் தனது மொழி, கலை, கலாச்சாரங்களைக் காப்பாற்றவேண்டுமெனில் அந்த இனத்துக்குத் தனியான பிரதேசம் வேண்டுமென்று மாமேதை கார்ல் மார்க்ஸும் ஒப்புக்கொண்டுவிட்ட உண்மைகளைத் தப்புக் கணக்குப்போட்டுத் தலைமேலாய் சொல்லும் சிலர் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் திணித்துவிட்டுச் சென்ற ஒற்றையாட்சி என்னும் தேர்ச்சில்லில் தமிழினம் சிக்கிச் சீரழிந்து மடிந்து வருவதைப்பற்றி கிஞ்சித்தும் சிந்திக்கிறார்களில்லை."

மேற்கண்டவாறு தீப்பொறி ஆசிரியர் திரு. அந்தனிசில் புத்தளம், நாவற்காடு, மணல்தீவு. கற்பிட்டி போன்ற இடங்களில் தமிழர் விடுதலைக் கூட்டணிக் கிளையும் தமிழ் இளைஞர் பேரவைக் கிளையும் கூட்டாக நடத்திய கருத்தரங்குகளில் பேசுகையில் குறிப்பிட்டார். திரு. அந்தனிசில் உடப்பில் உரையாற்றுபோது கூறியதாவது:-

"எம்மையெல்லாம் சுரண்டிவிட்டு இங்கிருந்து வெளியேறிய வெள்ளையர்கள் எம்மிடம் பறித்தெடுத்த பூமியையும், ஆட்சியையும் எமக்குத் திருப்பித் தராமல் ஏதோ சுதந்திரம் தந்திருப்பதாகக் கூறிச் சென்றார்கள். அந்தச் சுதந்திரம் அமைவிலங்கை ஒடிப்பதற்குப் பதிலாக தமிழினத்தின் கரங்களில் புதிய விலங்கை மாட்டிய சோகக்கதையில் முடிந்தது. அதன் பலன் தமிழனிடம் அன்றிருந்த நிலம் இன்றில்லை. இன்றிருக்கும் நிலமும் என்று பறிபோகுமோ? வடக்கு, கிழக்கு முதல் புத்தளம் வரை ஆண்ட தமிழன் இன்று அஞ்சியும். கெஞ்சியும், துஞ்சியும் வாழவேண்டியநிலை. இந்த இழிநிலை போக்கி தமிழன் தன்னைத்தானே ஆள விழித்தெழுவோம். விடை காண்போம்."

அடுத்துப்பேசிய புத்தளம் தமிழர் விடுதலைக் கூட்டணிக் கிளைத் தலைவர் டாக்டர் ஐதுறுஸ் எம். இல்யாஸ் கூறியதாவது:-

"புத்தளத்தில் முஸ்லிம்களுக்குச் சொந்தமான 13000 ஏக்கர் தென்னந் தோட்டங்கள் அரசினால் சுவீகரிக்கப்பட்டன. இன்று இந்தத்தோட்டங்களில் ஒரு ஏழை முஸ்லிமுக்குத்தானும் வேலை வாய்ப்போ, குடியிருப்பு வசதியோ செய்து தரப்படவில்லை. தமிழ் பேசாத மக்களுக்கே வேலை வாய்ப்பும், குடியிருப்பு வசதிகளும் செய்து தரப்படுகின்றன. இந்த அநீதிகளை எதிர்க்க முஸ்லிம்களாகிய நாம் தமிழர் விடுதலைக் கூட்டணியினருடன் இணைந்து போராடவேண்டும்." (அ)

தவக்கால நற்சிந்தனை

'ஆண்டவனின் பேரருளால் பாவங்களினின்று தப்புகிறோம் அவன் அருள் இல்லாவிட்டால் மிகப் பெயரும் புகழும் பெற்ற பெரியோர்களுடைய கதியும் அதோகதியாகிவிடும். அவன் அருள் இருந்தால் தான் மீள்வோம் என்பது உண்மையாயினும்நாமும் பிராயத்தனமின்றி சும்மா இருக்க கூடாது. அருள் என்பது கடற் காற்றைப் போல் வீசிக் கொண்டிருக்கிறது. ஆயினும் அந்தக் காற்றைப் பயன் படுத்துவதற்காகப் படகுகாரர்கள் பாய்விரித்தாலன்றி படகு செல்லாது. நம்முடைய உள்ளங்களாகிய பாய்களைச் சரியாக விரித்து வீசுகின்ற அவன் அருளைப் பயன் படுத்திக் கொள்வோமாக'

-இராஜாஜி
(இராம கிருஷ்ண உபநிஷதம்)

என்று ஆழ்ந்து, தெளிந்து தமக்கு அறிவுறுத்துகிறார். மற்றவர்களை குறைகூறிக் கொண்டிருப்பதால் மட்டும் நமது குற்றங்கள் நீங்கிவிடுமா? மிகப் பெரும்பாலோர் அப்படித்தான் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். பொன்னைக்காய்ச்சி அடிக்கிற பொற் கொல்லனுக்குத் தான் தெரியும் நான் இந்த வடிவமுடைய நகையை செய்யப் போகிறேனென்று. ஆனால் பொன்னுக்குத் தெரியுமா அது எந்த உருவத்தை அடைகிறதென்று! அதுபோலவேபொன்னின் நிலையிலுள்ள நமக்கு என்ன தெரியப் போகிறது? பொற் கொல்லனாகிய ஆண்டவனுக்கல்லவா தெரியும் எதை செய்ய வேண்டுமென்று. அப்படிப்பட்ட நாம் மற்றவர்களின் குறைகளைக் கவனிப்பதற்குமுன் நமது குறைபாடுகளையும் அவசியம் முதலில் கவனித்ததாக வேண்டும் நம் பாவக் குறைகளைப போக்குவதற்கு ஆண்டவனின் அருளை நாம் பெற பிரார்த்திக்க வேண்டும். உண்மையான தூய உள்ளத்தோடு ஆண்டவனைத் தொழ வேண்டும் அப்போது நம்முடைய வேண்டுதல்கள் ஏற்றுக்கொள்ளப் படும். -ஞானஒளி

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 2-30, 6-30, 9-45
சனி, ஞாயிறு 10-30
சிவகுமார்-ஜெயசுதா
பட்டிக்காட்டு ராஜா

விவசாயத்தில் தோல்வி: அதனால் தற்கொலை

நெல்லியடி, வியா.

பயிர்களின் விளைச்சல் அடுத்தடுத்துக் குறைந்ததினால் மனமுடைந்த வாலிபர் நஞ்சு குடித்துத் தற்கொலை செய்து கொண்டார்,

இச்சம்பவம் கரணவாயில் நடந்தது. கரணவாய் வடக்கு குளங்கரையைச் சேர்ந்த கந்தையா திருநாமம் (35 வயது) என்பவரே இவ்வாறு தற்கொலை செய்துகொண்டவராவர்.

இவரது மரணம் குறித்து உடுப்பிட்டி மரணவிசாரணை அதிகாரி திரு. எம். வி. புவனேந்திரம் விசாரணை நடத்தினார். வல்வெட்டிதுறைப் பொலிசார் சாட்சிகளை ஆஜர் செய்தனர்.

இம்மரணம் தொடர்பாக இறந்தவரின் சகோதரரான கே. இரத்தினம் (40 வயது) சாட்சியமளித்தார்.

தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. (அ)

பங்கீட்டுப் பொருட்களுடன் சைக்கிளும் அபேஸ்

யாழ்ப்பாணம், வெள்ளி

தமது குடும்பத்திற்குரிய பங்கீட்டுப் பொருட்களை வாங்கிக்கொண்டு வந்த சைக்கிள்காரர் ஒருவர் பங்கீட்டுப் பொருட்களுடன் கூப்பன்களையும், தமது சைக்கிளையும் திருடரிடம் பறிகொடுத்தார்.

இச்சம்பவம் சுன்னாகத்தில் நடைபெற்றது. எஸ். சின்னத்தம்பி என்ற பிரஸ்தாப குடும்பஸ்தருக்கே இந்தப் பரிதாப நிலை ஏற்பட்டுள்ளது.

சம்பவதினம் தாம் சங்கக் கடையில் பொருட்களை வாங்கிய பின், பொருட்களையும் பூட்டில்லாத சைக்கிளையும் ஒரு நேநீர்க்கடை வாசலில் நிறுத்திவிட்டு கடையினுள்சென்று வந்தபோது சைக்கிளையும் அதில் கட்டப்பட்டிருந்த பொருட்களையும் காணவில்லை எனப் பொலிஸில் செய்துள்ள புகாரில் தெரிவித்திருக்கிறார்.

சாதாரண உடையில் பொலிஸார்

இதுபற்றிய தீவிர விசாரணையில் ஈடுபட்டுள்ள சுன்னாகம் பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரி ஜனப் இ. ஏ. ஏ. காதர் சுன்னாகம் பகுதியில் அதிகரித்து வரும் சைக்கிள் திருட்டுக்களை ஒழித்துக்கட்ட சாதாரண உடையில் பொலிசாரை ஜனநெரிசல் உள்ள இடங்களில் கடமையில் ஈடுபடுத்தியுள்ளார். (உ)

இரத்தினக்கல்

தோண்டும் முயற்சியாம்: 102 பேர் கைது

கொழும்பு, வியாழன்

பொலநறுவைப் பகுதியில் சட்டவிரோதமாக இரத்தினக்கல் தோண்டும்முயற்சியில் ஈடுபட்டதாக 19உழவுஇயந்திரங்களும், ஒரு லொறியும் கைப்பற்றப்பட்டதுடன் 102 நபர்களும் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச்சட்டவிரோத செயலால் அரசாங்கத்தின் வருமானம் குறைவதுடன் நீர்ப்பாசனப் பகுதிகளில் மண்சரிவுகளும் ஏற்படுவதாகத்தெரிவிக்கப்படுகிறது. (உ)

வீடுடைத்துக் கொள்ளை

கொழும்பு, வியா

வெலிக்கடையைச் சேர்ந்த திருமதி சுமணு விஜயசிங்க என்ற பெண்ணின் வீடுடைக்கப்பட்டு தங்க நகைகள் உட்பட பத்தாயிரம ரூபா பெறுமதிமிக்க பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

சம்பவத்தினம் இவர்வேலைக்காரியை வீட்டில் பாதுகாப்புக்கு வைத்துவிட்டு குடும்பத்துடன் வெளியூர் சென்றிருந்தாராம்.

வெலிக்கடைப் பொலிசார் விசாரணை புரிகின்றனர். (உ)

ஈழநாடு
The EELA NADU

காலணிகள் விலைகுறையும்

கொழும்பு, வியாழன் காலணிகள், விவசாய இரசாயனப் பொருட்கள் றப்பர் தயாரிப்புகள் ஆகியவற்றின் விலைகளையும் குறைக்க அரசு தீர்மானித்துள்ளது.

காங். வாலிபர்களின் தேர்தல் பிரச்னை
செயலாளரைச் சந்திப்பர்

யாழ்ப்பாணம், வெள்ளி தமிழ் காங்கிரஸ் வாலிப முன்னணி குழு நாளை தமிழ் காங்கிரஸ் செயலாளர் திரு. தா. சிவசிதம்பரத்தை சந்தித்து பொதுத்தேர்தல் தொடர்பான விஷயங்கள் குறித்து பேசவிருக்கிறது.

சட்டத்தரணி எஸ். லோகேஸ்வரன் தலைமையில் உள்ள இக்குழுவில் 10 பேர் இடம் பெற்றுள்ளனர்.

இக்குழுவினர் தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம், நிர்வாக செயலாளர் திரு. ரி. சங்கரப்பிள்ளை, கிளிநொச்சி எம். பி. திரு. வி ஆனந்தசங்கரி, சட்டத்தரணி ஆர். விஸ்வநாதன், திரு. திருநாவுக்கரசு ஆகியோரையும் சந்திக்கவிருக்கிறது.

இதன் பின்னர் இக்குழுவினர் தமிழர் விடுதலை கூட்டணித் தலைமைப் பீடத்தையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவிருக்கின்றனர்.

இப்பேச்சு வார்த்தை விபரங்கள் இம்மாதம் 14-ம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெற விருக்கும் காங்கிரஸ் வாலிப முன்னணிக்கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கிறதாம். (க)

இலங்கை ஆயுள்வேத கல்லூரிக்கு ஏப். 2-ல் பல்கலைக்கழக அந்தஸ்து

கொழும்பு, வியாழன் இலங்கை ஆயுள்வேத கல்லூரி ஏப்ரல் மாதம் 2-ம் திகதி முதல் இலங்கைப் பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்படும்.

இணைக்கப்படும் இக்கல்லூரி இனிமேல் இலங்கைப் பல்கலைக் கழக ஆயுர்வேத நிறுவனம் என்று அழைக்கப்படும்.

ஆயுர்வேத கல்லூரியின் சகல நிர்வாக வேலைகளும் பல்கலைக்கழக துணைவேந்தரின்கீழ் கொண்டுவரப்படும்.

இது தொடர்பான விசேட வைபவம் ஒன்று சனிக்கிழமை காலை 11-45 க்கு ஆயுர்வேத கல்லூரி வளவில் நடைபெறும்.

யாழ். ஆயுர்வேதக் கல்லூரிக்கு

இதே வேளையில் கைதடியில் அமைந்துள்ள யாழ். ஆயுர்வேத கல்லூரியில் நோயாளர்கள் தங்கியிருந்து சிகிச்சை பெறுவதற்கான "வார்ட்" ஒன்று இவ்வாண்டு அமைக்கப்படும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது. (இ)

கதவடைப்பு

யாழ்ப்பாணம், வெள்ளி யாழ். ஆயுர்வேத மாணவர்களின் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்குமுகமாக இன்று கைதடியில் உள்ள வர்த்தக நிலையங்கள் யாவற்றையும் பூட்டி கடையடைப்பு செய்யுமாறு கைதடி கிராம வைத்தியர்கள், வர்த்தகர்கள், பொதுமக்கள் ஆகியோர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். [இ]

யாழ். லங்கா சித்த ஆயுர்வேத வைத்தியக் கல்லூரியை அரசுடன் பொறுப்பேற்கவேண்டுமென்றும் கைதடியில் கட்டப்பட்டுள்ள வைத்தியக் கல்லூரிக் கட்டிடத்தைத் தங்களுக்குக் கொடுக்கவேண்டுமென்றும் கோரி கைதடியில் சத்தியாக்கிரகமிருந்துவரும் கல்லூரி மாணவர்கள் கல்லூரியின் நிர்வாக அதிகாரி டாக்டர் கெங்காதரம், லிகிதர் இளங்கோவன், மாணவர் மன்றத் தலைவர் திருலோகமூர்த்தி ஆகியோர் தலைமையில் ஊர்வலமாகச் சென்றபோது எடுத்த படம்

சத்தியாக்கிரகம் செய்யும் ஆயுர்வேத மாணவர் கட்டிடத்துள் செல்வர்?

யாழ்ப்பாணம், வெள்ளி கைதடி ஆயுர்வேத கல்லூரி கட்டடத்தில் யாழ். சித்த ஆயுர்வேத கல்லூரி மாணவர்கள் இம்மாதம் 5-ம் தேதி சத்தியாக்கிரகம் செய்வதுபற்றி ஆலோசிக்கப்பட்டுவருகிறது.

அன்றையதினம், வடபகுதியெங்கும் பாடசாலை பகிஷ்கரிப்பு நடத்துவதற்கு மாணவர் இயக்கங்கள்மூலம் ஏற்பாடும் செய்யப்பட்டுவருவதாகக் கூறப்பட்டுவருகிறது.

அன்று பாடசாலை பகிஷ்கரிப்புச் செய்யும் மாணவர்கள் ஊர்வலமாகக் கைதடிக்கு வந்து, சத்தியாக்கிரகத்தில் கலந்துகொள்வதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுவருகிறது.

யாழ். சித்த ஆயுர்வேத கல்லூரி மாணவர்கள் அன்று காலை 6-மணி முதல் மறுநாள் காலை 6-மணிவரை உண்ணாவிரதம் இருக்க முடிவு செய்துள்ளனராம். மாணவிகள் காலை 6-மணி முதல் மாலை 6-மணிவரை உண்ணாவிரதம் இருப்பார்கள் என மாணவர் சங்க பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார். இதேசமயம் சத்தியாக்கிரகம் செய்பவர்களுக்குப் பல இடங்களிலிருந்தும் உணவும், பானமும் வழங்கப்பட்டு வருகிறது.

ஏன் இந்தப் போராட்டம்?

கைதடி ஆயுர்வேத கல்லூரி கட்டடத்தை ஆயுர்வேதக் கல்லூரிக்குக் கொடுப்பதற்கு இதுவரை அரசு மறுக்கவில்லை என்றும் இந்தச் சந்தர்ப்பத்தில் இப்படியொரு சத்தியாக்கிரகப் போராட்டம் ஏன் என்பது புரியாமலிருக்கிறதென்றும் வட இலங்கைச் சுதேச வைத்தியர் சபை உறுப்பினர் டாக்டர் கே. எஸ். பரம்சோதிநாதர் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

கைதடியிலுள்ள ஆயுர்வேத கல்லூரிக் கட்டடத்தைத் தமக்களிக்கவேண்டுமென்ற மாணவர்களின் கோரிக்கை நியாயமானதென்பதை இப்பிரச்னையை அறிந்த அனைவரும் ஏற்றுக்கொள்கின்றனரென்றும் இதற்காகப் போராடுவதற்கு அவர்கள் தயாராக இருக்கின்றனரென்றும் தெரிவித்துள்ள டாக்டர் பரம்சோதிநாதர் இந்த நேரத்தில் இப்படியொரு சத்தியாக்கிரகப் போராட்டம் ஆரம்பித்திருப்பது மாணவர்களைத் தவறானவழியில் செலுத்தி, சிவர்

செல்வாவின்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள், பிரார்த்தனைகள் செய்யப்பட்டன. கோயில் பிரசாதங்களை மக்கள் 16-ம் வார்ட்டிற்கு கொண்டுவந்து கொடுத்தனர்.

பார்வையாளர் புத்தகத்தில் மக்கள் தொடர்ந்து கையெழுத்திட்டு வருகின்றனர். இதுவரை 3872 பேர் கையெழுத்திட்டுள்ளனர்.

திருமதி செல்வநாயகம், 16-ம் வார்ட்டில் தொடர்ந்து தங்கியிருந்து நிலைமையை அறிந்துவருகிறார். செல்வாவின் புதல்வரான திரு சந்திரஹாசன் நேற்று, சில வைத்திய ஒழுங்குகளைச் செய்வதற்காக கொழும்பு சென்றுள்ளார்.

தந்தை செல்வாவின் தலையில், சத்திரசிகிச்சைசெய்யப்பட்ட பகுதி றப்பரினால் கட்டப்பட்டிருக்கிறது. இன்னும் கட்டு அவிழ்க்கப்படவில்லை. காயங்கள் ஆறுவதற்கு உள் மருந்துகள் கொடுக்கப்பட்டு வருகின்றன.

முன்னேஸ்வரம், கோணேஸ்வரம், கதிர்காமம், மற்றும் மட்டக்களப்பு, கொழும்பு பகுதிகளிலிருந்தும் கோயில் பிரசாதங்கள் அனுப்பப்பட்டிருந்தன. (க)

தமது சொந்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்காகவே என்று சந்தேகிப்பதற்கு இடமுண்டு என்றும் கூறுகிறார்.

கோரிக்கை வெற்றி பெறும் சமயத்தில் இப்படியொரு போராட்டத்தை சூழ்நிலை தெரியாமல் ஆரம்பித்திருப்பது கவலைக்குரியதாகும் என்றும் சபை உறுப்பினரான டாக்டர் பரம்சோதிநாதர் மேலும் தெரிவித்துள்ளார்.

செல்வாசுகம்பெற...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விசேட வழிபாடு இடம்பெற்றது.

கிரிமலையில்...

கிரிமலை சிவன்கோவிலில் விசேட பூசையும், கிரிமலை முத்துமாரியம்மன் கோவிலில் விசேட வழிபாடும் நடைபெற்றது.

மாதகலில்...

மாதகல் கிறிஸ்தவ தேவாலயத்தில் விசேட பிரார்த்தனை நடைபெற்றது. கொல்லங்கலட்டிப் பிள்ளையார் கோவில், தாவடி சாமாட்சி அம்மன்கோவில் ஆகியவற்றில் விசேட வழிபாடு நடந்தது. உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம், திரு. எம். ஆலாலசுந்தரம் ஆகியோர் கலந்துகொண்டார்கள்.

உரும்பராயில்...

உரும்பராய் செம்பாசுப்பிரமணிய கோவிலில் விசேட வழிபாடு நடைபெற்றது. ஐயனார் கோவிலிலும், நாச்சிமார் கோவிலிலும் நடந்த விசேட வழிபாட்டில் திரு. ஏ. அமிர்தலிங்கம் கலந்துகொண்டார்.

கொழும்பில்...

வெள்ளவத்தை ஸ்ரீ சம்மாங்கோடு மாணிக்கவிநாயகர் ஆலயத்தில் நடந்த விசேட அபிஷேகத்திலும் ஆராதனையிலும் அரசாங்க எழுதுவினைஞர் சங்க உறுப்பினர்களும் மற்றும் பலரும் கலந்துகொண்டனர்.

இலங்கை இந்து இளைஞர் பேரவை பல கோவில்களில் விசேட வழிபாடுகளையும் ஆராதனைகளையும் ஒழுங்கு செய்திருந்தது. பேரவைத் தலைமைச் செயலாளர் திரு. க. சச்சிதானந்தன் இதற்கான ஏற்பாட்டைச் செய்திருந்தார். (க-இ)

அமிர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

போராட்டம் நடத்துமாறும் திரு. வாசுதேவா கோரிக்கை விடுத்துள்ளார்.

புதிய கட்சி ஆரம்பிக்கமாட்டார்

தாம் புதிய கட்சி ஒன்றை ஆரம்பிக்கப்போவதில்லை என்றும் தமது நிலை குறித்து நாளை பத்திரிகைகளுக்குத் தாம் அறிக்கை ஒன்றை வெளியிடவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் தமது நிலை பற்றி நாளை மறுதினம் கட்சி அங்கத்தவர் கூட்டத்திலும் அடுத்த வாரமளவில் பொதுக் கூட்டமொன்றிலும் தாம் உரையாற்ற இருப்பதாகவும் கூறிய அவர் விரைவில் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் பல கூட்டங்களை தாம் நடாத்த எண்ணியுள்ளதாகவும் தெரிவித்தார் (இ)

பிரதேச...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அவரை சார்ந்த இயக்கமோ பிரதேச சுயாட்சி கொள்கையை ஏற்றுக் கொள்கிறார்களா என்பது பற்றி பதிலளிக்கும் போது எது உண்மை எதுபொய் என்பதை சகலரும் அறியக் கூடியதாகவிருக்கும். (க)

கூ.சங்கங்கள் மூலம் மருத்துவ ஆலோசனை
இன்று முதல் அமுல்

கொழும்பு, வெள்ளி இன்றுமுதல் கூட்டுறவுச்சங்கங்கள் ஊடாக அரசாங்கவைத்திய ஆலோசனைகள் வழங்கப்படும் புதியமுறை அமுலுக்கு வருகிறது.

கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர், சுகாதார இலாகாவின் அறிவுறுத்தலுக்கு அமைய இம்முறையை அமுல்நடத்தவிருக்கிறார்.

மருந்துப்பொருள் விற்பனைகளும் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக இன்றுமுதல் நடைபெறும்.

இவைமூலம் கூட்டுறவுச் சங்கங்களின் வருமானம் கணிசமான அளவு அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ)

கொழும்பில்...

(1-ம் பக்க தொடர்ச்சி)

இன்று வெளிநடப்புச் செய்தமை ஆச்சரியத்துக்குள்ளானது என்று சுகாதார அமைச்சர் திருமதி சிவா ஒபயசேகரா தெரிவித்துள்ளார்.

மேலும் பொதுமக்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தாது வழமையான சேவைகளை மேற்கொள்ளுமாறு திருமதி ஒபயசேகரா டாக்டர்களைக் கேட்டுள்ளார். (இ)

ஒரு கல்லூரியில் நான்கு அதிபர்கள்

கல்வியங்காடு, வியாழன் வடபகுதியில் ஒரு கல்லூரியில் நான்கு அதிபர்கள் கடமையாற்றுகின்றனர்.

நவாலி மகாவித்தியாலயத்திலேயே இவ்வாறு நான்கு அதிபர்கள் கடமையாற்றுகின்றனர். ஏற்கனவே இங்கு 2ம் தர அதிபராகக் கடமையாற்றிய பெண்மணி ஒருவர் மாற்றத்திற்குள்ளாகியதை அடுத்து அவரது இடத்திற்கு 3ம் தர அதிபர் ஒருவர் நியமிக்கப்பட்டார்.

பின்னர் 2ம் தர அதிபரின் மாற்றம் ரத்துச் செய்யப்பட்டதை அடுத்து இவ்விருவரும் உட்பட வேறுபட்ட தரங்களையுடைய வேறு இரு அதிபர்களும் இங்கு நியமிக்கப்பட்டு எல்லாமாக நான்கு அதிபர்கள் தற்போதுகடமையாற்றுகின்றனர். (க)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanadu (P. O. Box 49, Jaffna) Telegram: Eelanadu, (Telephone 389. Registered as a Newspaper in Sri Lanka.